# இன்பவல்லியின்
# எழிலோவியம்

## இந்தியெதிர்ப்பு இயக்கக்காவியம்

பைந்தமிழன்.

# இன்பவல்லியின்
# எழிலோவியம்

இந்தியெதிர்ப்பு இயக்கக்காவியம்

பைந்தமிழன்

முதற்பதிப்பு : அக்டோபர் : 1967

இது தமிழக முதலமைச்சர் மாண்புமிகு பேரறிஞர் சி. என். அண்ணு M.A., அவர்களின் ஐம்பத்தொன்பதாவது பிறந்தநாள் விழாவின் காணிக்கையாகத் தமிழன்னையின் திருவடிகளில் சமர்ப்பிக்கப் பெற்றது.

விலை ரூ. 1—00

கலா பிரஸ், சென்னை-17.

## பேராசிரியர் டாக்டர்

## சி. இலக்குவனார் M.A; M.O.L; Ph.D. அவர்கள்

## அன்புடனளித்த

# அணிந்துரை

புலவர் பைந்தமிழன் இயற்றிய "இன்பவல்லியின் எழிலோவியம்" எனும் செந்தமிழ் நலம் பேணும் சிறு காப்பியத்தை அச்சேற்றுவித்தற்குமுன்பே நச்சிப்பிடித்துச் சுவைத்து மெச்சினேன். "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல்சான்ற புலனெறி வழக்கம்" பொதுள இவ்வெழிலோவியம் அமைந்துள்ளது. அகப்பொருள் கெழுமும் பிற்காலக் கோவை வடிவில் இன்பமார் எழிலுறு தலைவனும் தலைவியும் தோன்ற இக்கவினுறு காப்பியம் உருவாகின்றது. காப்பிய அரங்கிற்குரிய யாப்பியல் தலைப்புகள் கொடுக்கப்பெற்றுக் காதற்சுவை கற்போருள்ளம் கவரும் வகை நன்கு எடுத்தியம்பப் பெறுகின்றது.

காதலால் கட்டுண்ட இன்பவல்லியும் எழிலரசும் இன்தமிழ் ஏற்றத்திற்கு உழைப்பதே தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு பேரறிஞர் அண்ணாவின் சீர்சால் தலைமையில் வாழ்வின் நெடும் பயணத்தைத் தொடங்குவதாக அமைத்துள்ள பாங்கு போற்றற்குரியது. 1965-ல் நடைபெற்ற தமிழ்க்காப்புப் போரில் காப்பியத்தலைவர்கள் கடமையாற்றுவதும், ஐந்திணை வளங்களின் அணிமிகு காட்சியும், செந்தமிழ்ப் புலவரின் சீர்சால் மாண்பும், காங்கிரசு ஆட்சியின் வெந்துயர்ச் செயல்களும் பேரறிஞர் அண்ணாவின் தலைமையில் அமைய இருக்கும் செந்தமிழ் நலம் பேணும் செங்கோலாட்சியும் துங்கமார் தூயதமிழில் சொல்லோவியப் படுத்தியுள்ளமை கற்பார் உள்ளத்தைக் களிப்புக் கடலுள் ஆழ்த்தும். பழைய முறையில் புதிய சுவையைப் பொருந்த வைத்துள்ள புலவரின் புலமைத் திறம் மிகவும் பாராட்டுதற்குரியது,

தமிழும் தமிழரும் ஏற்றமுறத் தமிழர்கள் ஆற்ற வேண்டிய கடன் பேறிஞர் அண்ணாவின் ஆட்சியை அமைத்தலே என்று அறுதியிட்டுரைத்து அது அமையப் போகும் மாட்சியையும் கனவு கண்டு நினைவில் எழிலோவியமாக்கித் தந்துள்ள இப்புலவர்மணி இன்னும் பலப்பல காப்பியங்களைப் படைத்துத் தண்ணார் தமிழன்னையின் திருவடிகளில் படைப்பாராக. தமிழுலகம் இவரைப் புரப்பதாக.

மதுரை
11—11—'66

சி. இலக்குவன்

# ஆக்கியோன் உரை

'இன்பவல்லியின் எழிலோவியம்' என்னும் இச்சிறிய சொற்சித்திரம் இரண்டு பாகங்களைக் கொண்டது. தமிழர் தம் இருகண்களெனத் தகும் காதலும் வீரமும் இதில் கவின் பெறுகின்றன. முதற்பாகத்தில் காவியத்தலைவன் தலைவி ஆகிய இருவரின் களங்கமற்ற காதல் வாழ்வும் கன்னித்தமிழ்ப் பற்றும் சித்திரிக்கப்படுகின்றன. அவர் தம் காதலிற் கனிந்த வீரமும், அவ்வீரம் விளைத்த விறலும் இரண்டாம் பாகத்தில் ஏற்றம் பெறுகின்றன.

தமிழகத்தில் இந்தி திணிக்கப்படுதல் தவிர்க்கப்பட வேண்டின் 67 பொதுத் தேர்தலில் காங்கிரசுக்கட்சியைத் தோற்கடித்தல் வேண்டும்; பேரறிஞர் அண்ணா அவர் களின் சீரிய தலைமையில் இயங்கும் தி.மு.க வை வெற்றி பெறச்செய்தல் வேண்டும் என்ற பெருநோக்குடன் 65 இந்தி எதிர்ப்பியக்கப் புரட்சியினை நிலைக்களனாகக் கொண்டு தீட் டப்பட்டதிக் கற்பனைக் கருவூலம் தி.மு.க. மாநில மாநாட்டில் வெளியிடும் விழைவுடன் 66 அக்டோபரிலேயே இதுவரையப்பட்டதெனினும் பல இடையூறுகளால் உரிய காலத்தில் வெளியிட இயலாது போயிற்று.

தமிழகத்தில் காங்கிரசு எய்திய தோல்விக்கு முதற் காரணம் மத்திய அரசின் ஆட்சிமொழிக் கொள்கையே என்பதை உணர்ந்து காங்கிரசார் திருந்துவரென எண்ணி னோம். ஆனல், அவர்கள் தம் கொள்கையில் விடாப்பிடி யாக இருந்து வருதலையே இன்றும் காண்கிறோம், எனவே, இந்தியெதிர்ப்பியக்கப் போரில் தமிழ் மக்கள் செய்த தியாகத்தினை நினைவூட்டி என்றும் இந்தியை எதிர்க்கும் ஆற்றலை வளர்ப்பான் வேண்டியும், இந்தித்திணிப்பிற்குத் துணை நிற்கும் காங்கிரசு மீண்டும் தலையெடா வண்ணம் செய்தல் தமிழர்களின் தலையாய கடமையென்பதை வலி வுறுத்துவான் வேண்டியும் இதனை வெளியிட முன் வந்தேன். அறிஞருலகம் ஆதரவுதருவதாக.

இந்நூலுக்கு மணமுவந்து அணிந்துரை வழங்கியருளிய தமிழ்ச்சான்றோர் தமிழ்வாழ தம் பதவியிழந்தும், வெஞ் சிறை புகுந்தும், சலியாது உழைத்துவரும் பேராசிரியர் டாக்டர் சி. இலக்குவனார் M.A., M.O.L. Ph.D. அவர்களுக்கு என் நன்றியும் வணக்கமும் என்றும் உரியனவாகுக.

சென்னை
12—10—'67

பைந்தமிழன்

# தமிழ்த்தாய் வாழ்த்து

வாழ்க தமிழே! வளர்க தமிழே! நீ-என்றும் (வாழ்க)

ஃ ஃ ஃ

இனிய வுயிரே இன்ப நினைவே,
கனியின் சுவையே கன்னித் தமிழே! (வாழ்க)

ஃ ஃ ஃ

பாலின் இனிமையே தேனின் மதுரமே
நூலின் நயமே நுண்பொருள் வயமே (வாழ்க)

ஃ ஃ ஃ

காலை மலரே மாலை நிலவே
நீல விசும்பே கோல முகிலே (வாழ்க)

ஃ ஃ ஃ

குளிர்ந்த அருவியே தெளிந்த சுனையே
குலவும் தென்றலே நிலவும் வசந்தமே (வாழ்க)

ஃ ஃ ஃ

குழலின் ஒலியே மழலை மொழியே
கடலின் அலையே கவிதை நடையே (வாழ்க)

ஃ ஃ ஃ

மயிலின் அசைவே குயிலின் இசையே
மலரின் மணமே பொழிலின் எழிலே (வாழ்க)

ஃ ஃ ஃ

என்றும் இளமை ஒன்றும் அனமே
அன்று கழகம் நின்ற புகழே
நன்றுன் பதமே என்றும் பணிவோம் (வாழ்க)

# இன்பவல்லியின் எழிலோவியம்

முதற்பாகம்

உலகத்துவாழும் உயிர்களுக்கெல்லாம் நிலேக்களனுகத் திகழ்வது இன்பம். இனபத்தில் சிறந்தது காதல் இன்பம். காதல் ஆண்மை பெண்மை முகிழ்த்த ஆடவர் பெண்டிர் அகத்தே அரும்பி மலருந்தன்மையது, இதனை எழில்பட இயம்ப எழுந்தனவே அகப்பொருட் கோவைகள்.

"பொதுவாக நோக்குமிடத்துக் கோவைகள் உருவும் திருவும்பருவமும் குலனும் குணமும் அன்பும் முதலிய வற்ருல் தம்முள் ஒப்புமை யுடையராய தலேமகனும் தலே மகளும் பிறர் கொடுப்பவும் அடுப்பவும் அன்றிப் பால்வகை யால் தாமே எதிர்ப்பட்டு அன்பால் ஈர்க்கப்பட்டவராய்க் களவிற் புணர்ந்து இன்பந் துய்த்து, பின்கற்புநிலேயின் இற் கிழமைபூண்டு விருந்து புறந்தந்து அருந்தவர்ப்பேணி ஒழுகி வரும் இல்லற இயறகை நுட்பத்தைப் புனேந்துரைவகை யான் எடுத்தியம்புவண ஆகும்."

என்றுமுள நம் தண்டமிழ் மொழியின்கண் நின்று நிலவும் இத்தகு கோவைகளே ஒருபுடை தழுவி ஆக்கப் பெற்றதே "இன்ப வல்லியின் எழிலோவியம்" என்னும் இச்சொற் சித்திரம், இதன்கண் குறிப்பிடப்படும்தலேவனும் தலேவியும்--எழிலரசும், இன்பவல்லியும் ஆவர். தலேவன் தலேவியை முதன்முதலில் பொழிலிடத்து ஓர் இன்பவல்லி யாக-இன்பமே வல்லியின் வடிவில் தோன்றுவதாகக் கண்ட னன் ஆதலின் அதுவே அவட்குப் பெயராயிற்று. அங்ங னமே தலேவியும் தலேவனே எழில் அரசாக— எழிற்கு அர சாகக் கண்டனளாதலின் அவற்கும் அப்பெயர் அமைவ தாயிற்று.

இன்பவல்லி நாகப்பட்டினத்திற்கு அண்மையில் உள்ள மருவூர்ப்பாக்கம் என்னும் சிற்றூரைச் சேர்ந்தவள், ஒரு பெரு நிலக்கிழாரின் அருந்தவச் செல்வி; நாணம் மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் பெண்மைக்குரிய நாற்குணங் களும் நன்கு அமையப்பெற்றவள். அழகு ஒரு வடிவுகொண்டு வந்தாலனைய அப்பெண்மணி அவ்வூரின் கண்ணுள்ள உயர் நிலைப்பளளியில் எஸ். எஸ். எல், சி வரைபடித்துத் தேர்ச்சி பெற்றவள். தண்டமிழ் மாட்டுத் தணியாக் காதலள். இசைத்தமிழை ஏற்றமுறப்பாடும் இயல்பினள். பதினெட் டைப் பிராயத்தினள்.

எழிலரசு நாகப்பட்டினத்தின் கண் உள்ள உயர்நிலைப் பள்ளி ஒன்றில் தமிழ்ப் பணியாற்றும் நல்லாசிரியர் ஒரு வரின் செல்வமகன். அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என் னும் ஆண்மைக்குரிய அருங்குணங்கள் அனைத்தும் ஒருங்கே நிரம்பப் பெற்றவன் அருந்தமிழ்மாட்டு அளவில் காதலன் கன்னித் தமிழில் கவிபல புனையும் கவினுடைப் புலவன் இருபத் தோராட்டைப் பிராயத்தினன் கட்டழகமைந்த இக்காளை சென்னை பச்சையப்பன் கல்லூரியில் எம். ஏ (தமிழ்) இறுதி வகுப்பில் பயின்று வந்தனன்.

1964 டிசம்பர் திங்களில் கிறித்துமஸ்விடுமுறையை முன்னிட்டு ஊர்சென்ற எழிலரசு பொழுதுபோக்காக நாடோறும் கடற்கரைக்குச் சென்று உலாவிவருவது வழக்கம். ஒருநாள் கடலின் கருநீல வண்ணத்தின்மேல் புரண்டோடிவரும் வெள்ளிய திரைகளைப் பார்த்து மகிழ்ந்த வண்ணமே தன்னையும் மறந்து நெடுந்தொலை சென்றுவிடுகின்றான். அங்ஙனம் சென்றவன், ஆங்கிருந்த புன்னைமரப் பொதும்பரின்கண் பொழில்விளையாடும் நோக்குடன் போந்து, பூக்கொய்வான்வேண்டி ஆயம் பிரிந்து செல்லத் தனித்து நின்ற இன்பவல்லியைக் கண்ணு றுகின்றான். கவிதை வடிவில் காவியம் வளர்கிறது:—

# கைக்கிளை

## காட்சி

### தலைமகன் தலைமகளைக் காண்டல்

சீர்பூத்து முகில்சுமந்து மதியம் பூத்துச்
சிறந்துதிகழ் அதன்கரிரு குவளை பூத்துப்
பேர்பூத்துக் குமிழ்குமுதம் வள்ளை பூத்துப்
பிறங்கிடுநற் கமலமுகை இரண்டு தோற்றி,
கார்பூத்தல் கண்டுகளி கொண்ட மஞ்ஞை
கலாபம்விரித் தசைவதெனக் கவினைப்பூத்து
நார்பூத்தின் அழகிளமை நாணம் பூத்து
நளிர்கொடியொன் றொளிர்கின்ற தென்சொல்
கேளே! 1

## ஐயம்

கண்ணுற்ற தலைமகள் கொடி அல்லள் பெண்ணென் றறிந்து இங்ஙனங் காட்சியிற் சிறந்து தோன்றிய இவள் தெய்வப் பெண்ணோ என ஐயப்படுதல் :—

கற்பனையில் வனைந்திட்ட கன்னிப் பெண்ணோ
கவிஞருரை காவியத்தின் கவிதைப் பெண்ணோ
பொற்புமிகும் வானுறையும் புதுமைப் பெண்ணோ
பூவிலுறை திருமகளோ வாணி தானோ
அற்புமிக வெனதுள்ளம் கவரா நின்ற
ஆரணங்கின் பேரெழிலைக் காணும் காலை
சிற்பரனின் திருவருளிவ் வடிவங் கொண்டு
சிறியேனைச் சேரவந்த திறந்தான் கொல்லோ! 2

## துணிவு

கண்ணிவாடுதல், கண்ணிமைத்தல் முதலியகுறிகளான் மானிடமகளேயென, முன்ஐயுற்ற தலைமகன் துணிந்து கூறல் :—

கயலிணையும் கணையிணையும் ஒருங்கு வென்று
கருங்குவளை உறழ்விழிகள் இமைத்த லாலும்
மயிலெனவிங் கியலிடுவாள் கமல பாதம்
மாண்புறுநம் தமிழ்மண்ணில் மருவ லாலும்
துயல்வருநீள் கோதையினில் இயற்கை வாசம்
துதைந்திடலால் தூமலர்கள் வாட லாலும்
மயலிலைநெஞ் சே! யிவளும் தமிழப் பெண்ணே
மாண்புறுநற் றுணையாக மகிழு வாயே ! 3

## குறிப்பறிதல்

தலைவிவேட்கை அவள் பார்வையால் தன்னிடத்து உண்டென்று குறிப்பால் அறிவது :—

கலைபயில்வார்க் கதுவருத்தம் முன்னர் ஈந்து
கழிமகிழ்வைப் பின்னர்தருங் கணக்க தென்னச்
சிலைபயில்நன் னுதலிவளின் அயில்வேற் செங்கண்
செய்தபுண்ணிற் கருமருந்துஞ் செப்பா நிற்கும்
அலைபயில்சீர் அமுதநிறை குமுதச் செவ்வாய்
அணிமுறுவ லதுசிறிதும் அரும்பா நிற்கும்
நிலைபயிலும் மின்னென்ன நிற்கு மிந்த
நேரிழையெற் குடம்படுநன் னினைவி னளே 4

# இயற்கைப் புணர்ச்சி

## இரந்து பின்னிலை நிற்றல்

### தலைவியை இரந்து இதஞ்சொல்லுதல்

*கரும்பொன்னைக் கவர்ந்திழுக்கும் காந்த மென்னக்*
*கரும்படுசொல் மானே! நின் கண்கள் என்னை*
*விரும்பியழைத் திடவும்நீ வினய மொன்றும்*
*மேவார்போல் நிற்றல்மிக வியப்பே! கோங்கின்*
*அரும்பனைய குவிமுலையின் அணைத்து நின்றன்*
*அதரமுறும் அமுதளித்தென் ஆவி காவா*
*திரும்பனைய நெஞ்சுடையார் போறல் மென்மை*
*இயல்புடையார்க் கியைபுறுமோ அழக தாமோ!* 5

### முன்னிலையாக்கல்

*தலைமகன் தலைமகளை முன்னிலையாக்கிக் கூறுதல்—*

*வானத்தின் வெண்ணிலவோ வதனம் நீலம்*
*வார்ந்தொழுகும் மேகநிரை யோநின் கூந்தல்*
*மீனத்தின் மறுபதிப்போ பிறழுங் கண்கள்*
*வில்வளைவோ நின்புருவ நெளிவு நல்ல*
*கானத்தின் உறுஞ்சுவையோ அமுதோ தேனோ*
*கரும்புதரு நறுஞ்சாறோ கனிந்த இன்சொல்*
*மோனத்தின் இன்பருள்நல் முலையாய்! துய்ய*
*முத்தோநின் முறுவலது மொழிந்தி டாயே!* 6

## மெய்தொட்டுப்பயிறல்

*தலைவன் தலைவி மெய்யினைத் தீண்டி நெருங்குதல்—*
*தீண்டுமாறு என்னை, புனல் ஓடும்வழி புல்சாய்ந்து புறங் கிடப்பதுபோல் வேட்கை மீதூரப்பட்டு நாணம் ஒருபாற் சாய்ந்து கிடப்ப நின்ற தலைமகளைத் தலைவன் தீண்டற் கஞ்சி நின்று குழலில் வண்டை ஒட்டுவது போல நெருங்கி வண்டை ஒட்டுகையில் கைபட்டது போலத் தொட்டான் என்க—*

*பொய்யான திவட்கிடையாய்ப் பொருந்தல் கண்டும்*
*போற்றுது கோதையினைப் பொருந்தா நிற்பீர்*
*மெய்யான அளியினங்கள் ஆயின் நீவிர்*
*மேவாத செயலிதனைப் புரிதல் என்னே!*
*செய்யாத அழகுடைய இன்ப வல்லி*
*சிறியவிடை பெரியகொங்கைக் கிடைந்து வாடி*
*எய்யாநின் றதுசிறிதும் உணரீர் கொல்லோ!*
*இமையுறினும் இடையதிறும் எழுமின்! இன்னே! 7*

## பொய் பாராட்டுதல்

*தலைமகன் தலைமகள் மாட்டு உள்ளதும் இல்லதும் கூட்டிக் கொண்டாடுதல்—*

*கருங்கடல்சேர் வெண்மணலில் பசிய தோகைக்*
*கலாபமயில் எனநிற்கும் கன்னி கேளுநன்*
*மருங்கினைநாம் சிறிதொவ்வோம் என்று மாள்கி*
*மங்குலினில் மின்னோடி மறைதல் காணுய்!*
*கருங்குவளை விழிக்குடைந்து கண்ணீர் சிந்திக்*
*கயமருவிக் கலங்கிடலுங் காணுய்! தூய*
*அருங்குமுத மலர்வாயின் முல்லை பூத்த*
*அணிமுறுவற் றெரியிழாய்! என் அன்புத் தேனே! 8*

மயிலாடல் காண்மின்னே என்னும் முன்னே
மான்விழிநின் சாயலதற் கின்மை கண்டங்
கொயிலாக வஃதொதுங்கி நிற்றல் காணாய்!
ஒள்ளிழைநின் நடைகற்க உற்ற அன்னம்
அயலாகப் பதுங்கிற்றோ அன்றி நல்ல
அரியதவம் செய்துவர அகன்ற தோதான்
குயிலான துன்மழலை நிகர்க்க வேண்டிக்
குக்கூகு வெனக்குழைந்து கூவல் கேளாய்! 9

### இடையூறு கிளத்தல்

நாணத்தால் தலைவி தனது கண்களைக் கைகொண்டு மறைத்தனளாக, அவள்செயல் தனக்கிடையூறு விளைத்தலைத் தலைவன் கூறுதல் :—

(வேறு)

ஆணிப்பொன் சிலைக்கு மேலும் அழகள்ளி அப்பி னாற்போல்
நாணிக்கண் புதைத்து நின்ற நங்கைநின் வதன மென்னும்
மாணிக்கச் சுனையிற் பூத்த மலர்தரும் அமுதுண் டின்பக்
காணிக்குள் புகுந்து லாவக் கடைக்கணைக் கருளு வாயே! 10

### முயங்குதறுத்தல்

தலைவி முயங்கற்கு உடன்பட்ட அருமையை வலியுறுத்திக் கூறுதல்:—

(வேறு)

எட்டாத பேரின்பம் முத்தி யென்றே
எடுத்துரைத்தார் பெரியோர்கள் அதுதான் என்னே!
பட்டாடை புனைந்ததங்கப் பதுமை யே!நின்
பார்வையொன்றே எனக்கின்பம் பரிந்து நல்கும்
கிட்டாத இன்பமெலாம் கிட்டு மேநின்
கிளிமொழியைக் கேட்டெனுளங் கிளைக்குங் காலை
தட்டாத மோனநிலை தருமுன் கூட்டம்
தனிஞானம் அஃதீன்ற குழவி யாமே 11

## புணர்ச்சியின் மகிழ்தல்

*தலைமகன் தலைமகளைப் புணர்ந்து மகிழ்தல்:—*

*தேன்தந்த செவ்விதழைச் சுவைத்தேன் அஃதும்*
*தெவிட்டாத தெள்ளமுதம் ஆதல் கண்டேன்*
*கான்வந்த கற்பகத்தின் கொம்பே நின்றன்*
*கனதனத்துப் படிந்துவகைக் கரையுங் கண்டேன்*
*வான்தந்த வளமெல்லாம் ஒருங்கே எற்குன்*
*வண்ணமணிக் கடிதடந்தான் வழங்கக் கண்டேன்*
*தான்வந்த தளிர்மேனித் தையல்! நின்னைத்*
*தைவந்தேன் ஞானத்தின் தலைநின் றேனே!* 12

## புகழ்தல்

*தலைவன் தலைவியைப் புகழ்ந்து கூறுதல்:—*

*தேன்செறிந்த நாண்மலரோ இன்ப ஊற்றோ*
*திகழ்ந்திடுநின் செங்கனிவாய் இதழ்கள் நல்ல*
*ஊன்செறிந்த உயிர்க்குயிரோ உயிர்ப்பை நல்கும்*
*ஒள்ளமுதம் நிறைகுடமோ உயருன் கொங்கை*
*வான்செறிந்த முகின்மருவும் மின்னோ ஒல்கி*
*வளர்கொடியோ நின்மருங்குல் இயற்கை வாசக்*
*கான்செறிந்த நறுமேனிக் கன்னி! நின்றன்*
*கடிதடமின் பார்கலியோ கதியோ சொல்லாய்!* 13

*செவ்வாழைத் தண்டோநின் நன்மணிக் குறங்கு*
*செங்கமலப் போதோநின் சிவந்த பாதம்*
*நவ்வாழைக் கனியோநின் அன்புப் பார்வை*
*நல்லமுதச் சுனையோநின் அதர ஊற்று*
*துவ்வாத தளிரோநின் மேனி வாசம்*
*துதையாத முகையோநின் முலைகள் தூய*
*சவ்வாது கமழ்முகிலோ நினது கூந்தல்*
*தண்டமிழ்! எந்தனுக்கிங் கியம்பி டாயே!* 14

## பெருநயப்புரைத்தல்

மீண்டும் இவன் வருவான் கொல்லோ வாரான் கொல்லோ எனவெண்ணி முகம் வேறு பட்டாளாக, அவ்வேறு பாட்டைக் குறிப்பால் உணர்ந்த தலைமகன் தனது மிகுந்த காதலை உரைத்தல்;—

கண்டேன்நான் கன்னியுனைத் தமிழ தாக
காணேன்நான் தமிழொழிய வேறொன் றை
உண்டேன்நான் தமிழ்ச்சுவையை உன்பால் அள்ளி
உம்பருல கமுதமதற் கொவ்வா தென்றுட்
கொண்டேன்நான் இளமைநலம் கொழிக்கக் கண்டேன்
குலவுதமிழ் இனிமையில்நீ குழைதல்கண்டேன்
தண்டேனில் இனித்தவிதழ்த் தையல்! கேள்நீ
தமிழாகி யெனதுயிராந் தகைகண் டேனே 15

## தெய்வத்திறம்பேசல்

இங்ஙனங் கூறியும் தெளிவுபெறாத தலைவிக்கு ஊழ்வலியினது திறத்தைக் கூறுதல்:—

அமையென்னத் திரள்மென்றோள் அணங்கே! தோகை
அணிமயிலே! பசுங்கிளியே! அனமே! அன்பால்
இமையென்ன நினைப்புரப்பார் இன்றி நீயும்
எளிதிங்கு வரப்பெற்ற தென்றல் லூழின்
அமைவுற்ற தெனுமுண்மை அறிந்தேன் தூய
அமுதனைய காதலினுக் கழிவே தின்பஞ்
சமைவுறநற் பெரும்போகம் தழைக்கக் கூடித்
தமிழினெழில் இளமைநலம் தழுவு வோமே! 16

## பயந்தோர்ப் பழிச்சல்

*தலைவியின் பெற்றோரைத் தலைவன் வாழ்த்தல்:—*

*உள்ளவினித் திடுஞ்சுவைசேர் தமிழே என்றன்*
*உயிர்க்குயிரே! உணர்வினுக்கோர் எழுச்சியூட்டும்*
*தெள்ளமுதங் கொடுவனைந்த சிலையே! மென்மை*
*திகழுவெழில் தவழுமிளந் தென்றலேநற்*
*கள்ளவிழும் நறுங்கூந்தற் கன்னி! நானுன்*
*கமலபதம் பணிந்திடவுங் கலவி இன்பம்*
*கொள்ளவுமிங் குனைப்பயந்தார் கோடி காலம்*
*குலவுகென இறைவனடி குறிக்கொள் வேனே!* 17

## பிரியேனென்றல்

*நீர்க்கரைப் பசுங்கொடி வேனில் வெப்பத்தால் நிறம் வேறுபடல் போலப் புணர்ச்சியின்பததாற் பெற்ற அழகு எம்பெருமான் பிரிவன் என்னுங் கவர்ச்சியால் விளர்த்த வெளுப்பு நீங்காமை கண்ட தலைமகன் நின்னிற் பிரியே னென்று வற்புறுத்திக் கூறுதல்:—*

*தமிழின்றி இனிமையது தழைக்கு மேனும்*
*தண்மையது வெண்ணிலவிற் றவிரு மேனும்*
*அமிழ்தைவிடுத் தரியசுவை அகலுமேனும்*
*அழகைவிடுத் திளமைநலம் அரும்பு மேனும்*
*உமிழ்கதிர நின்றியுல குய்யு மேனும்*
*உயிரின்றி உடலியக்கங் கொள்ளுமேனும்*
*இமிழிசைதீர்ந் தியாழ்பெருமை எய்து மேனும்*
*எழிலி! நினைப் பிரிந்துய்வ தியையுங் கொல்லோ!* 18

**செல்குங்கிழத்தி செலவு கண்டுளத்தொடு சொல்லல்;**

தலைவன், புணர்ச்சிக்களத்தினின்றும் பெயர்ந்து போகா நின்ற தலைமகளது செலவைக்கண்டு தன்நெஞ்சத்தொடு சொல்லல்:—

இன்றுவரை உயிரினையே கண்டார் இல்லை
என்றுரைப்ப தென்னே! என் உயிர்தான் இன்று
துன்றுகுழல் முகிலவிழக் கொடியின் ஒல்கித்
துவளுமிடை தனில்நெகிழுந் துகில்கை யேந்தி
மன்றல்கமழ் காவினிடை மயில தென்ன
மலர்விழிகொண் டியலுமதன் மாட்சி காணின்
நன்றுதவம் நாம்புரிந்த தென்ப தன்றி
நவிலுதற்கிங் கென்னுளதென் ! நயஞ்சேர் நெஞ்சே!

**பிரிந்து வருகென்றல்**

பகற்காலத்தே புன்னைமரப் பொதும்பரின் ஒரு பாங்கர் தேனருவி ஆற்றங் கரையில் அசோக மரம் நிற்க. பூங்கொடி சுற்றிப் படர்ந்திருக்க மாதவிக் கொடி நின்று மலர் பூத்து வண்டுந் தேனும் பாட வரிக்குயில் கூவத் தென்றல் வீசாநிற்க மணல்பரந்து பூந்தாது தவிசு படுத்தாற் போன்று பொலியுமிடத்துத் தலைவனும் தலைவியும் சின்னாட் கூடி மகிழ்ந்தனர். விடுமுறை கழிந்து கல்லூரி திறக்கும் நாள் வந்தது, வரவும் தலைமகன் தலைமகளைப் பலவாறு தேற்றி, ஆற்றியிருக்குமாறு கூறித்தேர்வெழுதி முடித்து வந்து கடிமணம் புரிவல் எனக்கழறிப் பிரிந்தனன்:—

தென்றலெனும் தேரூர்ந்து வசந்த வானில்
திகழ்மதனன் கிளிப்பரியை விரைந்து தூண்டிக்
கன்றலில்மென் றளிர்மேனிக் கன்னிப் பெண்கள்
கடிதடத்தேர் ஊர்ந்துவரக் குயில்கள் கூவ
மன்றலவிழ் மலர்க்கணையின் மகிமை தோன்ற
மதுக்கரும்பின் சிலையிலளி நாணி ஏற்றிப்
பொன்றும்வகை எனையெய்யா முன்னம் இங்குப்
போந்துநினைத் தழுவிமகிழ் வுறுவன் மின்னே'

கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலைய பொழுது கண்டிரங்கல்:—

சந்துற்ற கொம்பினிலே முல்லை தாவித்
தழுவிமுத்தம் தருகுதல்காண், தருவின் நீழல்
வந்துற்ற மறிகலையி னோடு கூடி
மருவிமகிழ்ந் துறைகுதல்காண், வற்று இன்பம்
தந்துற்ற நலம்கொழிக்கும் தகைகொள் மென்மைத்
தளிரேயென் றெனைத்தழுவித் தலைவர் என்பூங்
கொந்துற்ற குழல்நெகிழ்த்த கோலங் காணக்
குளிர்ந்துற்ற அந்தி! இன்று கொதிப்ப தென்னே! 21

## காமமிக்க கழிபடர் கிளவி

வேட்கைமிக்குச் சிறப்பச் சிந்தித்துக் கடல், கானல், பொழில் விலங்கு, புள் இவற்றை நோக்கித் தலைவி இரங்கிக் கூறுதல்:—

மானினங்காள்! மடவனங்காள்! மயில்காள்! நல்ல
மலர்வனங்காள்! மணற்றடங்காள்! மாண்பு மிக்க
தேனினங்காள்! பைங்கிளிகாள்! தெளிந்த கானத்
தீங்குயில்காள்! கடலலைகாள்! சிறிய பேதை
ஏனிணைகின்றனள்! உற்ற தென்னே! என்னீர்!
இரங்கற்க, வென்றுரையீர்! இன்ப அன்பின்
நானிணங்கப் புணர்ந்தகன்றார் கேளும் என்றன்
நலிவுரையீர் இதுநன்றோ? நவின்றிடீரே! 22

## தன்னுட் கையாறெய்திடு கிளவி

தலைவி துன்பத்தைப் பிரிதொன்றன் மேலிட்டுச் சொல்லுஞ் சொல்:—

வினைமுற்றி விரைந்திங்கு மீள்வன் மின்னே
மெலியல்லன விடுத்தகன்றார் மேவல் காணேன்
நனைமுற்றி மலர்பீர்க்க தென்ன என்றன்
நறுமேனி முழுதும்பொன் பூக்கக் கண்டேன்
எனைமுற்றும் நிகரவரும் அந்திப் போதுன்
எழில்கொண்டுன் காதலரும் ஏகினார்கொல்
கனைமுற்றும் கடலலையும் தென்றற் காற்றும்
கறுத்துனையும் வருத்துதுகொல்! கழறு வாயே! 23

இங்ஙனம் பிரிவுசுட வருந்திய தலைமகள் தலைமகன் விடுக்கும் முடங்கல் எனும் தூது கண்டு ஒருவாறு ஆற்றியிருந்தனளாக, கல்லூரி சென்ற தலைமகனும் பிரிவு வருத்த

வருந்தினனேனும் 'கடமை முன்பு களிப்புப் பின்பு' என்னும் மூதுரையை உளங்கொண்டு கல்வியில் கவனஞ் செலுத்தி வந்தனன்,

இந்நிலையில் 26—1—65 குடியரசு தினத்திலிருந்து இந்தியாவின் ஆட்சிமொழி இந்தியே எனத் தில்லிப் பாராளுமன்றம் சட்டம் நிறைவேற்றுகின்றது. இந்தியரியணையேறின் தமிழ்மிழியும் எனத் தமிழ்மறவர் சிலர் தீக்குளித்து உயர் துறக்கின்றனர். தமிழகத்துச் சான்றோர் பலர் ஆட்சியாளரின் அடாத செயல் குறித்துக் கண்டன அறிக்கைகள் விடுக்கின்றனர். தமிழக மாணவர் அணி சென்னையில் எழிலரசு தலைமையில் கூடி, அனைத்துப் பள்ளி கல்லூரி மாணவ மாணவியர் இந்தித் திணிப்பை எதிர்க்கும் அறிகுறியாக 25—1—65 அன்று கறுப்புடை அணிந்து ஊர்வலம வரவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றுகின்றது.

அதன்படி தமிழக முழுதும் மாணவ மாணவியர் வகுப்புகளுக்குச் செல்லாது கறுப்புடை அணிந்து 'இந்தி ஒழிக! தமிழ் வாழ்க!' என முழக்கமிட்டு ஊர்வலம் போந்தனர்.

அதுபொழுது மாணவர்கள் இசைத்துச் சென்ற எழுச்சிக் கீதம்;—

தாய்மொழியைக் காத்தலொன்றே நல்லறம் நல்லறம்
தமிழர்மானம் போற்றலொன்றே நன்மறம் நன்மறம்

காதல்வீரம் இரண்டும்நமது கண்ணதன்றோ
சொல்விடீர்

கனியுந்தமிழேம் உயிரதன்றோ கழறிடீர் கழறிடீர்

உற்றவீர வாழ்க்கைதந்த பரிசிதன்றோ சுதந்திரம்
உத்தமராம் வீரர்கட்கே உயர்த்திடுவோம் நம்கரம்

நற்றவந்தான் இதனினுண்டோ நவின்றிடீர்
நவின்றிடீர்

நன்மைமிக்க தமிழகத்தின் செல்வராய மக்களே

போர்முகத்து நீவிர்பெற்ற புண்ணதன்றோ
வீரத்தாய்
பொலிகவென்று நெஞ்சுவந்து பொறித்தநல்ல
முத்திரை
கார்முகத்துப் பயிரதென்னக் களிப்புறுக நம்முகம்
கலக்கமின்றித் தொண்டியற்றல் கடமையென்றே
அறிகுவீர்

வாடுமுளத்தைத் தளிர்க்கச்செய்யும் வீரவுணர்ச்சியே
வன்மையோடு புகழைநல்கும் போரின் எழுச்சியே

நாடும்மொழியும் கலையுங்காத்தல் நம்கடன் நம்கடன்
நலிவை நீக்கி நம்மையாளல் இறைகடன் இறைகடன்

என்றுமழியா இன்பசோதி வீர வாழ்க்கையே
எதிரீதற்குப் புவியிலில்லை என்ப துண்மையே

அன்றுவாழ்ந்த வீரமக்கள் அளித்த வாழ்வினை
அடைந்துநாமும் களிக்கின்றோமின் றதன்பயன்

இன்றுநாமும் இயற்றுகின்ற ஏற்றமுற்ற செயலினை
நன்றதென்று நாளைநமது நாடுவாழ்த்தத் தயங்குமோ!

கோழையாக நாளும்வாழும் வாழ்க்கை தன்னிலும்
கொற்றமிக்க வீரவாழ்க்கை உற்றுமாளல் நன்றரோ

நிலையாய்நமது வாழ்க்கை தன்னிலே என்றும் நிற்ப
திசையதல்லவோ
உலையாமுயற்சி உடையராகியே உழைத்துநாம்நம்
உரிமையெய்துவோம் 24

சென்னையில் நடந்த ஊர்வலத்தினர்க்கு, அடியுதை, கண்ணீர்ப்புகை, துப்பாக்கிக்குண்டு, சிறைவாசம் ஆகியவற்றைப் பரிசாகத் தருகின்றனர் ஆட்சியாளர். ஊர்வலத்தில் தலைமைதாங்கிச் சென்ற எழிலரசின் மீது அரசினரின் பார்வை விழுகிறது. கல்லூரி உணவு விடுதியிற் புகுந்து அடித்து உதைத்து இழுத்துச் சென்று சிறையிடைத் தள்ளப்படுகின்றான் எழிலரசு. தமிழகத்தின் பொற்காலமாகிய சங்ககால வாழ்வும், தற்காலத் தாழ்நிலையும் மாறி மாறித் திரையிடப்படுகின்றன அவன்மனக்கண்முன்.

சாதியிலே குலந்தனிலே சமயமெனுஞ் சழக்கில்
தடுமாறி நிலையழிந்த தமிழகமே! நீதான்
ஆதியிலே இருந்தநிலை அறிந்திலையோ அன்னாய்!
அவனிதனில் உனக்கிணையாய் அன்றிருந்தார்
உண்டோ

நீதியிலே அறந்தனிலே நிலைத்தபெரு வாழ்வில்
நெறிதிறம்பா மறமன்னர் ஆண்டதமிழ் நாடே!
பாதியிலே வாழ்விழந்தாய் நிலையழிந்தாய் நின்னைப்
பார்த்துமனம் பதைக்கின்றோம் பரிந்துமிக நொந்தே

சாதிவெறி வாக்குகளால் தலைவரெனத் தேர்ந்த
சட்டமன்ற உறுப்பினர்கள் மிக்குவரும் நாளில்
நீதியெங்கே நிலைத்திருக்கும் நேர்மையெங்கே
தளிர்க்கும்

நித்தியமும் அநித்தியமாய் நிலைகுலையும் அன்றோ?
ஏதினிநம் வாழ்வினிலே இன்பவொளி என்றே
ஏழையர்கள் சோர்ந்துருகி வாடுநிலை காணின்
மேதினியில் இந்நாட்டில் ஏன்பிறந்தோ மென்னும்
வெறுப்புணர்ச்சி எரிமலையாய் விறுகின்ற தம்மே! 26

எத்தொழிலை நோக்கிடினும் அத்துறையில் நல்லோர்
இருக்குமிடம் தெரிகிலதே தரிக்கிலதே நீதி
அத்தனையும் வெளிமயக்காய்ப் பணம்பறிக்கும்
துறையாய்

அறிவிருந்தும் பயன்படுத்தா அறிவிலிகள் நிறைவாய்
நித்தநித்தம் இலஞ்சவூழல் நிறையும்பெருங் கடலாய்
நிலைமாறி உருக்குலைந்த தமிழகமே! நீதான்
எத்தர்களின் பிடியொழிந்தே இன்பநிலை கூட
என்றுவரும் பெருவாழ்வுன் துன்பமெலாம் ஓட. 27

எம்தாய்த்திருநாடே. இன்றுள்ள தீமைகள் அனைத்தும் அழிய, சமதர்மவாழ்வு மலர, தமிழ்வளம்பெற, நாடு நல முற, நல்லோர்கள் ஆட்சிக்குவர நீ, உலகப்புகழ் எய்தித் திகழ "இந்தியெதிர்ப்பு அணி" ஒன்றுகண்டு அதன் வெற் றிக்குச் சலியாதுழைப்போமென உறுதிகொள்ளல் :—

சாதிமுத லாயபல தீமைகளுஞ் சாய
சமதர்ம வாழ்வதுவும் பூத்துமணம் பாய
நீதிமிகு நல்லாட்சி நம்தமிழில் மலர
நேர்மையுறு சான்றோர்கள் ஆளும்நிலை வளர
ஏதுமிணையின்றியுயர்ந் துலகிடையே நீயும்
இன்பமிகு வாழ்வினிலே அன்புநெறி மேவ
ஆதிமுதல் அடியிணையை ஏத்திமிக வாழ்த்தி
அருந்தமிழர் இந்தியெதிர்ப் பணிகாண்போம் தாயே!

இந்தியாட்சிமொழியாதலை யெதிர்த்து ஊர்வலஞ் சென்ற மாணவர்கட்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைப் பத்திரிகை வாயிலாக உணர்ந்து இன்பவல்லி உள்ளங் குமுறுகின்றாள். தாய்மொழி காக்கத் தலைமகன் சிறை புகுந்தமை தனிமகிழ்வைத் தருகின்றது அத்தளிரிளங் கொடிக்கு.

இந்தியெதிர்ப்புப் போராட்டம் பெரும்புரட்சியாக மாறுகிறது. சில தீய சக்திகள் அழிவு வேலையில் ஈடுபடு கின்றன. அதைத் தொடர்ந்து போராட்டம் தற்காலிக மாக நிறுத்திவைக்கப்படுகிறது.சிறைக்கதவுகள் திறக்கப்படு கின்றன. மாணவர்கள் வெளிவருகின்றனர். தாய்மொழி காக்கும் தனிப்பெரும் போரில் குண்டடிபட்டு உயிர்நீத்த மாணவமணிகளுக்கும், தமிழ்வாழத் தீக்குளித்த தன் மானச் செம்மல்களுக்கும், தீந்தமிழுய்யச் சிறைபுகுந்த திறன்மிகு மறவர்களுக்கும் தலைவர்களுக்கும் அனுதாபம் தெரிவிப்பான் வேண்டி மாபெருங்கூட்டமொன்று சென் னைக் கடற்கரையில் கூடுகின்றது. அதிற்றலைமை தாங்கிய எழிலரசின் உருக்கமான வேண்டுகோள் :—

இந்தியெனும் மந்தியினை அழைத்து வந்திங்
கெழின்மகுடம் புனைந்தடியில் வீழ்ந்து போற்றிக்
குந்திநின்று தொண்டுசெயும் குருடர் ஆனோர்
குமைந்தழிய அதுகண்டு குருதி கொட்டி
முந்திநின்று தமிழ்காக்க உயிரை நீத்த
முத்தனையார் ஆவியது நிறைவு கொள்ள
அந்தி சந்தி பாராது தமிழ ரானோர்
அணிஅணியாய்த் திரண்டெழுந்து பணிசெய்வோமே! 29

ooo ooo ooo

கட்டுண்ட கல்லூரிக் காளை யர்காள்!
காலம்வரும் பொறுத்திருங்கள் தேர்தல் போரில்
தட்டுங்கள் தமிழர்படை எழுந்து சாடத்
தருக்கிநின்றின் றதிகார மமதை யாலே
சுட்டுங்கள் சோதரரின் உயிரை யுண்ட
துட்டவிலங் கனையவர்கள் வீழ்ந்தார் என்று
கொட்டுங்கள் வெற்றிமுர சறுபத் தேழில்
குதித்திடுங்கள் தமிழ்வாழ்க வெல்க என்றே. 30

ooo ooo ooo

இனித்ததமிழ் அனமிருக்க இந்தி யான
எருமையினைக் கட்டியழல் எற்றிற் கோசொல்!
மனித்தரிடை மந்தியென வந்த சில்லோர்
மகிமைபெறத் தமிழிழிதல் மாண்பு தானோ!
கனித்தவுளத் தாய்மாரே! தமையன் மாரே!
கண்டனைய மொழியுடைய கன்னி மாரே!
தனித்திருந்து சிந்தியுங்கள் தரையில் ஆட்சி
தனையொழித்தல் காலவுநல் றெழுமின்! இன்றே. 31

கடற்கரைக் கூட்டம் முடிந்த பின்னர் மாணவர் தலைவர்கள் பச்சையப்பன் கல்லூரி உணவு விடுதியில் ஒருங்கு குழீஇ, தாய்மொழி காக்கும் பணியில் சளையாது உழைக்கவும், தமிழகத்தில் இந்தி திணிக்கப் படுதலை ஆரம்ப

காலத்திலிருந்து எதிர்த்துவரும் பேரறிஞர் அண்ணா அவர்களின் தனிப் பெருந் தலைமையின்கீழ் இயங்கிவரும் தி மு. கழகத்திற்கு அருந்துணையாக நின்று செயல்படவும் சீரிய இந்தி எதிர்ப்பணி ஒன்றினை அமைக்கின்றனர். அவ்வணியின் பொதுச் செயலாளராக எழிலரசு ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றான்.

எந்தமிழ் வளர ஏற்றமுற வழிவகுப்போமென எழிலரசு இயம்புதல்:—

தாய்மொழியைத் தவிரவொரு தெய்வம் இல்லை
தண்டமிழின் தரமறியார் தமிழர் இல்லை
பேய்மொழிநேர் பிறமொழியிற் பெருமை கொள்வார்
பிறந்திறுமென்? உண்மைஅவர் மனிதர் இல்லை
காய்பறித்துக் கனிவிடுக்கும் கடையர் நல்ல
கண்ணீருந்தும் காணாத குருடர் தீயர்
தேய்மதியர் அவர்சிறுமை செப்பல் எங்ஙன்
செந்தமிழ்எம் முயிரதுதான் செழிக்கச் செய்வோம் 32

இந்தி எதிர்ப்பணியில் பங்கு பெறுகின்றவர்கள் அனைவரும் தமிழ்மொழியின்கண் தோன்றிய முதனூல்கள் ஆகிய தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம் போன்ற ஒப்புயர்வற்ற ஒண்டமிழ் நூல்களை ஓதியுணர்ந்து எழுச்சிபெறுதல் நன்றெனஅவைகளின் பெருமையை நவிலுதல்:—

## தொல்காப்பியம்

எழுத்தினையும் சொல்லினையும் இயையக் கூறி
எழிற்பொருளின் விரிவனைத்தும் எளிதிற் றோன்ற
விழுத்தகுநுண் ணுணர்வுகளுக் குருவ மீந்து
மேதகவே படம்பிடித்து விளக்கி இன்பம்
பழுத்ததமிழ்ப் பாடலிலக் கணத்தி ேனாடு
பயில்வுறுநல் லுவமைமர பியலுங் கூறும்
தொழத் தகுதொல் காப்பியத்தின் தொன்மை போற்றி
தூய்மையுற அதன்வழிநின் றுலகம் வாழி! 33

## திருக்குறள்

உலகனைத்தும் ஒருபடித்தாய் ஒப்பும் வண்ணம்
உண்மையறம் பொருளின்பம் இவைதாம் என்ன
இலகும்வகை எடுத்தியம்பும் நூல்கள் தம்மில்
இதற்கிணையொன் றிலையென்ற இசையை ஏந்தித்
திலகமென வொளிறுதிருக் குறளின் மேன்மை
தெரிந்ததுசொல்வழிநின்று திகழிற் பொல்லாக்
கலகமறும் களிப்புமிகும் அன்பு வெல்லும்
கடலெனநல் இன்பமது கவினும் அன்றோ! 34

## சிலப்பதிகாரம்

இமிழ்கடல்சூழ் புவியிலுயர் இமயந் தன்னில்
எழில்வில்லும் கயல்புலியும் இலங்க ஏற்றி
உமிழிசையிவ் வுலகினிடை யுலவச் செய்த
உரனுடைய தமிழ்மன்னர் உயர்வு பேசும்
அமிழ்தனைய முத்தமிழின் முதனூ லான
அரியசிலப் பதிகாரம் அதனை ஆய்ந்து
தமிழர்புகழ் அன்றிருந்த நிலையும் இன்று
தாழ்வுற்ற வகையுமுணர்ந் துழைத்தல் நன்றே 35

இந்தியெதிர்ப்பைத் தொடர்ந்து பல்கலைக் கழகத்தேர்வுகள் ஒதுக்கப்போடப்படுகின்றன. எழிலரசு காதலியைக் கண்டு களிக்கும் அவாவுடன் முன்னர் முடங்கல் எனுந் தூதுவிடுத்துப் பின்னர் ஊர் செல்கின்றான். மறுநாள் புன்னைமரப் பொதும்பரில் இன்பவல்லியைக் கண்டின்புறுகின்றான்.

கொஞ்சு தமிழ்காக்க வெஞ்சிறை புகுந்த நெஞ்சுரத்தைப் பாராட்டி இன்றுபோல் என்றும் நாடும் மொழியுங் காக்க நற்றொண்டாற்ற வேண்டுமென்ற நங்கையை நோக்கித் தலைவன் கூறுதல்:—

தெற்கோடி இமயமலை ஒளிந்திட் டாலும்
தென்றலது வடக்கிருந்து வந்திட் டாலும்
புக்கோடிக் கதிர்மதியம் புதைந்திட் டாலும்
பொறையினுடன் உண்மையறம் பொசிந்திட்டாலும்
முக்கோடி தமிழர்களின் உரிமைக் காக
முசியாத இளந்தமிழின் உயர்வுக் காக
இக்கோடி யொளியவென்ற இனிய சொல்லாய்
இந்தியினை எதிர்ப்பதற்கிங் கிமையும் அஞ்சேன். 36

விழியான வேல்பாய்ந்த புண்ணை தாற
வெம்மைமுலை என்மார்பம் மூழ்க நின்று
சுழியாத இன்பவெள்ளம் துதைந்து பாயச்
சொகுசாக எனைத்தழுவும் இன்ப வல்லி
கழியாத கட்டிளமைக் கன்னி யான
கனிதமிழ்த்தாய் கோலோச்சும் மாட்சி காண
ஒழியாதிங் குழைப்பதென உறுதி பூண்டேன்
உன்னுணை ஒண்டொடியென் உரைதப் பாதே. 37

தூங்கிக் கிடந்த தமிழர்களைத் தட்டியெழுப்பி வீறு கொளச்செய்தது 65ல் நடந்த இந்தியெதிர்ப்புப் போர். அன்று தொன்றிய எழுச்சி என்றும் நின்று பயன்தர வேண்டுமென்பதை நினைவுபடுத்தவே **'இந்தியெதிர்ப்பு"** **அணி** என்ற ஒன்று கண்டதாகவும், நற்றமிழ் வளரவும் நல்லாட்சி மலரவும், நாடுநலம்பெறவும் உழைத்தலே அவ்வணியின் இலட்சியம் என்றும் தலைமகன் கூறுதல்:-

தூங்குகின்ற தமிழரிடை உணர்ச்சி வெள்ளம்
துதைந்தெழுந்து பாய்ந்ததன்று தானே யென்ன
வீங்குகின்ற புயந்தட்டிக் குதித்தார் இந்தி
வீழ்கவென ஆர்ப்பரித்தார் வெல்லம் அன்று
நீங்குகின்ற இவ்வுயிரென் றெதிர்ந்தார் போரில்
நிலையாகப் புகழதனை நிறுத்திச் சென்றார்
ஆங்கதனை நினைவுகொள அயர்வு போக்க
அருந்திறல்சேர் இந்தியெதிர்ப் பணிகண் டோமே! 38

### கல்வியின் மகிழ்தல்

தலைமகனது உரனும், இந்தியெதிர்ப்பணியின் குறிக்கோளும் கேட்டுப் பேரானந்தப் பெருவெள்ளத்தில் மூழ்கிய தலைவியும் தலைவனும் கூடி மகிழ்கின்றனர்.

### தலைவன் கூற்று

திருமகளும் கலைமகளும் மறையின் கண்ணே
திகழவிருந் தடிபரவும் தொண்ட ராேனார்
பெருமையுற நிறைகல்வி செல்வம் நன்கு
பெருக்கிடுவார் என்று தமிழ் பேசா நிற்கும்
உருவினிய திருவே! நீ சிவந்த வுன்றன்
உகளபதக் கமலமதில் உற்று நின்றெற்
கருமையுறுந் துணையாகி அன்பும் ஆகி
ஆருயிராய் வாழ்வனைத்தும் அருளா நின்றாய்! 39

### புகழ்தல

கச்சினுக்குள் அடங்காது கதித்துத் தோன்றுன்
கனதனத்தின் கவின்முழுதும் கண்டு கண்டு
மெச்சிநின்றேன் அகங்களித்து வேட்கை மிஞ்ச
வேள்மதனன் வில்விழவின் வெற்றி வேண்டி
வைச்சிருக்கும் நிறைகுடமோ செய்ய வாழை
வளர்முகையோ இன்பநிதிக் குவையோ வென்று
நிச்சம்பல வுவமையெனக் குதிக்கு மேனும்
நிகரீதற்கிங் கொன்றினையுங் காணேன் மின்னே! 40

இரண்டு வாரங்கள் இங்ஙனம் இன்பமாகக் கழிகின்றன. தேர்வு எழுதுதற்குரிய காலம் வரவும், தேர்வு முடிந்ததும் விரைந்து வருவன் என்று தலைவியைத் தேற்றிப் பிரிந்து சென்ற தலைவன், உருவெளித் தோற்றததில் தலைவியைக் காண்கின்றான் கண்டு கழிமகிழ்வு கொண்டு அவடன் தமிழ்ப்பற்றைப் பாராட்டி எழுச்சி பெறுகின்றான்:—

கொத்தாத கொவ்வைநிகர் அமுதச் செவ்வாய்க்
குரலினிதோ குழலினிதோ என்னும் வண்ணம்
அத்தானே எனவழைத்துன் இதழ்த்தேன் ஊட்டி
அருகிருந்து கவிதைநலம் ஆய்ந்து காட்டி
எத்தாலுந் தமிழ்த்தாயை மறவேல் என்றன்று
எனைத்தழுவி விடைகொடுத்த இன்ப வல்லி
புத்தான அமுதாரும் போக பூமி
பொருந்துகினும் தமிழ்மறந்து பொருந்தேன்
மின்னே! **41**

'காமமிக்க கழிபடர்கிளவி' தலைமகன் வரவு நீடித்தலின் காமமிகுந்த நினைவோடு கூடிய சொல்:-

**வண்டினை இரத்தல்**

அல்லாரும் கூந்தலைத் தவிழும் வண்ணம்
அங்கைகொடு தழுவியெனை அணைத்து நின்று
கல்லாரீத் தேர்வெழுதி விரைந்து வந்து
கடிமணத்தை முடித்துமகிழ் வுறுவம் என்று
செல்லாரும் பொழிற்பாங்கர் செப்பிப் போன
செய்தியினை நினைவூட்டேன் சிந்தை அன்னான்
மல்லாருந் திருப்புயந்தான் கவர்ந்து சென்ற
வளையுமெடுத் தவர்க்கியம்பி அருள்வாய் வண்டே!
**42**

**நெஞ்சொடு கிளத்தல்**

வண்டோட்டி மருங்கணைந்து மாதே நின்றன்
வதனவெழில் தனக்குடைந்த வகைமையால்நிற்
கண்டோட்டங் கொண்டதுநல் மதியம் வானில்
கனதனத்துக் குடைந்தமரை முகைகள் தாமும்
தண்டோட்டின் கயமருவித் தவத்தைச் செய்யும்
தகைமையினைக் காண்கவென அன்று தாழை
வெண்டோட்டின் மணநாறும் புன்னை நீழல்
விளம்பிய சொல் இயம்பிநெஞ்சே விரைந்து வாவே! 43

## கொஞ்சும் கிளியினைக் கெஞ்சுதல்

முற்றாத தளிர்மேனி முருகு கொள்ள
முகக்கமலம் பொலிவெய்த முலைகள் விம்ம
வற்றாத இளமைநலம் வயங்கா நிற்ப
மருவியெனைப் பிரிந்தகன்றார் வரவு காணேன்
எற்றாலிங் கவர்வரவு தகைந்த தென்ன
எண்ணியெணி இதயமிகக் கலங்கு வேற்குப்
பற்றாக ஒருவார்த்தை பகர்தி யாயின்
பைங்கிளிநிற் கருங்கனிகள் பரிந்தீ வேனே! 44

## மேகத்தினை வேண்டல்

மேகநினை என்கூந்தல் பழித்த தென்று
மிகமெலிந்து மனமுளைந்து வருந்தல் என்! என்
ஆகமது விளரும்வகை பிரிந்து சென்றார்
அணிமணிக்கார் வரவுணர்ந்தெற் குரைத்தி யேல்நின்
சோகமற நின்கருமை வண்ணம் அன்பிற்
சுடரிறைவன் கண்டத்தும் இல்லை அன்னான்
பாகமுறை குயிற்குழற்கும் இல்லை யென்று
பழிச்சிநினைப் பெரிதுவந்து பரவு வேனே! 45

தேர்வு முடிந்து ஊர் திரும்பிய தலைமகன் தலைமகளைப் பொழிலிடத்துக் கண்டுமகிழ்தல்:-

தேர்வெழுதி முடித்ததுமே திரும்பி வந்தேன்
தேர்வென்ன நினிற்பெரிதோ செப்பு கண்ணே
பார்முழுதும் ஆள்பதவி வரினும் நின்னைப்
பார்த்துமகிழ்ந் திடற்கவையும் ஈடா தோவென்
நார்முழுதும் நினக்காக்கி இன்ப வானில்
நாள்கழிய இளமையுற உவவா நிற்பேன்
கார்முழுதும் ஒவ்வாத கரிய கூந்தல்
கன்னியுன்றன் கடைக்கணிப்பென் கவிதை வாழ்வே!

பிரிந்துழி எம்மை நினைந்திரோ எனவினாய தலைவியை நோக்கித் தலைவன் கூறுதல்:-

தென்றலிலே திளைத்துன்னைக் கண்டேன் வீழும்
தெள்ளருவி படிந்ததிலே நின்னைக் கண்டேன்
மன்றல்கமழ் சோலையிலே கண்டேன் நின்னை
மழலைமொழிக் குழவியினில் நின்னைக் கண்டேன்
ஒன்றுமுளத் தன்பினிலே கண்டேன் நின்னை
ஒண்டமிழின் துறைகளிலே நின்னைக் கண்டேன்
துன்றுசுவைக் கவிதையிலே கண்டேன் நின்னை
துலங்கிடுநல் அழகிடைநீ சொக்கக் கண்டேன். 47

° ° °

நிற்கையிலே ஓரழகு நெளியக் கண்டேன்
நடக்கையிலே ஓரழகு நிற்கக் கண்டேன்
கற்கையிலே கவிதைநலம் அனைத்தும் நீயாய்க்
காவியமாய் ஓவியமாய்க் கவினக் கண்டேன்
புற்கையினும் அமுதமது பொருந்தக் கண்டேன்
புன்மையினும் பொற்பதுதான் பொலியக் கண்டேன்
கொற்கையிலே வளர்ந்ததமிழ் அன்னாய்! நீயும்
கொழிதமிழே ஆதலையும் கண்டிட்டேனே! 48

## புணர்ச்சியின் மகிழ்தல்

தமிழினிலே கலைபலவும் தழைக்கக் கண்டேன்
தமிழ்நின் கண்கலைகள் பேசக் கண்டேன்
தமிழினிலே இளமைநலம் தவழக் கண்டேன்
தமிழ்! நின் கலவியதைத் தருதல் கண்டேன்
தமிழினிய வமுதமதாய் அமையக் கண்டேன்
தமிழ்! நின் இதழமுதம் அருத்தக் கண்டேன்
தமிழினிய கவிதைகளாய்ச் செழிக்கக் கண்டேன்
தமிழ்! நீ அதன்பயனுந் தகைகண் டேனே! 49

**தலைவியின் நலத்தைப் பாராட்டிக் கூறுதல்:—**

*குன்றொத்த குவிமுலைகள் என்பேன் ஒற்றைக்*
*கொடியிலிரு குன்றுறுதல் அமையா வென்பேன்*
*நின்றொத்த கமலமுகை நிகர்க்கு மென்பேன்*
*நீள்கதிர்கண் டடப் புயமும் நெகிழ்தலாலே*
*அன்றொத்த அவையென்ப தன்றி வேறே*
*அறிவொத்த உவமையினைக் காணேன் நின்பாற்*
*சென்றொத்துச் செறியுங்கால் இளமை நல்கும்*
*திறன்கருதி அமுதுநிறை கனியென் பேனே!* 50

'களவின் வழித்தே கற்பு,' என்னும் பண்டைய தமிழ் மணமுறையை யொட்டி இன்பவல்லிக்கும் எழிலரசுக்கும் சுற்றஞ்சூழ, கற்றோர்வாழ்த்த, பெற்றோர்மகிழ மண மகளில்லில் **பேரறிஞர் அண்ணு** அவர்களின் சீரிய தலைமை யில் திருமணம் இனிது நடந்தது.

**அண்ணு அவர்களின் வாழ்த்துரை**

*கழியாத பேரிளமைக் கன்னி யான*
*கனிந்ததமிழ் அரசோச்சும் கவின தெய்த*
*அழியாத வளம்பலவும் தமிழர் வாழ்வில்*
*அணிசெயநீர் பொதுநலத்துக் கும்மை ஆக்கி*
*ஒழியாத துயர்தரவிங் குற்ற பொல்லா*
*உலுத்தர்களின் பிடியகல அறுபட் தேழில்*
*சுழியாது தொண்டுபுரிந் தின்பம் பெற்றுத்*
*துய்யதமிழ் மொழியெனநீர் வாழ்க! என்றார்.* 51

**சான்றோர்களின் வாழ்த்துரை**

*இன்பவல்லி எழிலரசும் வாழ்க! வாழ்க!!*
*இளமையொடு வளமையெய்தி வாழ்க! வாழ்க!!*
*அன்புநெறிக் குறளறத்தின் வழியே நின்று*
*அகப்பொருளின் துறைமருவி அமுத மன்ன*
*இன்பநுகர்ந் தில்லறத்தின் பயன தான*
*எழின்மகவை நலமனைத்தும் இலங்கப் பூத்தெம்*
*துன்பமொடு **காங்கிரஸூம்** தொலைய வென்று*
*துய்யபுகழ் முடியினுறும் சுடராய் வாழ்க!* 52

மணவிழாவில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி நவின்ற எழிலரசு தமிழ்மொழியின் உயர்வு வேண்டி உழைத்தல் ஒன்றே தனது தலையாய கடமை யென்னல் :—

தாயான தமிழ்மொழியின் உயர்வ தொன்றே
தலையாய கடமையென உறுதி பூண்டேன்
தாயான தமிழ்வாழத் தமிழர் வாழச்
சலியாதிங் குழைத்திடுவேற் குறுதி நல்கத்
தாயான தமிழனைய இன்ப வல்லி
தனித்துணைபெற் றேனின்று தகைமை சான்ற
தாயான அன்புடைய அறிஞர் அண்ணா
தலைமைவழி நடந்துவெற்றி தனைக்காண் பேனே! **53**

தமிழ்காக்கும் பணியில் தனக்கும் வாய்ப்புத்தருமாறு தலைமகள் வேண்டுதல் :—

என்னுயிரே! எழிலரசே ! எங்கள் அத்தான்
இளந்தமிழர் அணித்தலைவா! இமயம் வென்று!
மன்னுபுகழ்த் தமிழ்மன்னர் உயிர்போ னின்ற
மறத்தமிழர் வழித்தோன்றல்! மாண்பு சான்று
துன்னுமிசைத் தமிழ்காக்கச் செய்யா நிற்கும்
தூய்யபணி அடியேற்கும் கிட்டும் வண்ணம்
பொன்னனைய நும்தொண்டும் தமிழ்த்தாய்த்
தொண்டும்
புரிந்திடவெற் குவந்தருளிப் புரத்தல் வேண்டும்! **54**

**தலைவியின் வேண்டுகோளினை ஏற்றுத் தலைமகன் தண்ணளி புரிதல்**

உலகமெலாம் உயர்வாழ்வு பெறுதல் வேண்டின்
ஒப்பற்ற மொழிபலவும் உயர்தல் வேண்டின்
இலகுகின்ற மனிதகுலம் ஒன்றே என்னும்
எழில்நோக்கம்செயன்முறையில்முகிழ்த்தல்வேண்டின்
அலகில்வளம் குலவுகலை பலவும் ஈன்றிங்
கருந்தமிழ்த்தாய் அரியணையில் அமர வேண்டின்
திலகமொளிர் நுதன்மின்னே! நின்போன் நல்ல
தெரிவையர்கள் முன்வருதல் வேண்டும் வேண்டும். **55**

மணவினை கழிந்தபின்னர் தேனிலவு துய்ப்பான்வேண்டித் தலைவனும் தலைவியும் தென்றல் தவழும் திருக்குற்றாலம் வந்துறுகின்றனர்.

## பொதிகைக் காட்சி

வேறு

தென்றலொடு தமிழுதித்த தென்பொதிகை
இதுகாண்
தேனருவி கொழிக்கவளம் செழிக்குமலை இதுகாண்
குன்றில்நளிர் குளிர்தூங்கும் குற்றாலம் இதுகாண்
குதித்தபுனல் தெளித்தமணி குலவுமலை இதுகாண்
மன்றல்கமழ் ஆரம்வளர் மலயமலை இதுகாண்
மதிமகிழ்ந்து தவழ்ந்துவிழைந் தேறுமலை இதுகாண்
துன்றுமெழில் பொழில்தடவித் துளிசிதறு மஞ்சு
சூழ்ந்துவந்து தாழ்ந்துபணி தொன்மலை காண்
இதுவே! 56

வேறு

வருக்கையொடு வளர்கதலி வண்கனிகள் சிந்தும்
தருக்களுயர் வானுலகிற் றளிர்விடவே முந்தும்
பருக்கையென மணிசிதறிப் பகலினொளி விஞ்சும்
கருக்கலது தவழ்ந்தேறிக் கவின்முடியிற் றுஞ்சும் 57

பிடியினொடு மகிழ்களிறு பிளிறிமலை யேறும்
கொடிதழுவு மலர்விரிந்து குமுகுமென நாறும்
மடிதழுவு மகவினொடு மந்திகனி தேரும்
முடிதழுவும் மதியம்வரை முடிமணியை நேரும் 58

மந்தியொடு கடுவனுள மகிழ்ந்துகழை ஏறும்
சந்தினொடு சண்பகமும் தண்பொழிலில் நாறும்
செந்தினையி னொடுமுதிரை செழித்துவளங் கூறும்
தந்ததன வென்றருவி தடவரையைக் கீறும் 59

கிளியினொடு கிளிகூடிக் கிளக்கும்பல கதைகள்
அளியுடன்நல் அளிகூடி அரியவிசை பாடும்
துளியினொடு துளிகூடித் தூயருவி பாயும்
வளிதுளையுண் கழைகூடி வார்குழலின் ஊதும் 60

மான்மறியி னோடுகலை மருவிவிளை யாடும்
வான்நதியி னோடிகலி மலையருவி கூடும்
தேன்துருவு தும்பியிசை தென்றலொடு பாடும்
கான்விரவு சோலையது ககனமுடி சூடும் 61

தேனின்சுவை நிறைபுனல்கொள் தெள்ளருவி
பாய்தல்
வானின்மிசை யேறவமை வளர்படிய தேய்க்கும்
மானின்விழிக் கொடிச்சியர்கள் வான்மகளிர் நேர்வர்
கானின்வதி வேன்மறவர் கந்தருவர் ஒப்பர். 62

குயில்கூவும் கிளிபேசும் குளிர்தென்றல் வீசும்
மயில்ஆடும் அளிபாடும் மணியருவி எங்கும்
ஒயில்ஏயும் நளிர்குன்றில் ஒண்முகில்கள் தூங்கும்
பயில்ஆரம் வளர்சோலைப் பழம்பொதிகை இதுகாண்!
வேறு
63

மரகதப் பந்த ரிட்டு மல்லிகை வேய்ந்தாற் போல
விரவுபைம் பொழிலின்மீது வெண்முகில் படியாநிற்க,
பரவுநல் அழகாம் நங்கை பயிலரங் கணிசெய்
வான்போல்
இரவிதன் கதிர்க்கை நீட்டி எழில்வணம் தீட்டல்
ஓராய்! 64

அருவியின் னிசையி னோடுங் கிளியின மிழற்று
மோதை
பருகிய குயில்கள் பாடப் பசியமா மஞ்ஞை யாட
உருகிய களிப்பால் மந்தி உவந்து நோக்கிடநற்
கொன்றைத்
தருவினம் மலர்ப்பொன் சிந்தித் தலையளி புரிதல்
காணாய்! 65

குன்றெனும் நகில்கண் மீது குளிர்புனல் அணிகள் மின்ன
துன்றிய பொழில்கள் ஆன தூய நல்லுடை அணிந்து
நன்றெனக் கிணையோ இந்த ஞாலில நங்கைமா ரென்று
நின்றிடு வரைப்பெண் ணுளின் நேர்த்தியைப் பாராய்! கண்ணே! 6

வேறு

## நிலவு வருங் காட்சி

பாற்கடலில் தான்பிறந்த பான்மை நோக்கிப்
பார்முழுதும் பால்வண்ணம் படைப்பான் வேண்டி
நாற்றிசையும் வெண்மையுறக் கரிய தான
நளிர்கடலும் பாற்கடலாம் நளினம் கொள்ள
போற்றுமுயர் மலையனைத்தும் தூய வெள்ளிப்
பொருப்பதெனப் பொலிவுறவெண் சுதைசெய் வான்போல்
தோற்றிவருங் கலைநிறைநன் மதியங் காணாய்!
துடியெனமெல் லிடைகொண்டு துலங்கும் மின்னே! 7

நிலாமுற்றத்தே மகிழ்ந்திருந்த காலை தமிழ் மக்களின் கடமைகள் எவையெண வினைய தலைவிக்குத தலைவன் கூறுதல்:-

## தமிழ் மகளின் கடமை

தண்டமிழ்கற் றழகிளமை யினிமை யேய்ந்து
தனித்தமிழ்போற் களங்கமறத் தகைசேர் வாழ்வில்
கொண்டவனைத் தெய்வமெனக் கொண்டு போற்றிக்
குறிப்பறிந்தங் கவனிருதோள் குழையப் புல்லி
மொண்டின்ப முண்டொருகான் மழலையைத் தோற்றி
முந்துதமிழ்ப் பற்றவற்கு முலைப்பாலோடு
மண்டும்வகை யூட்டிமனை யறத்தின் நின்று
மாட்சியுறல் தமிழ்மகளிர்க் காட்சி யாமே!

## தமிழ் மகனின் கடமை

இந்தமிழும் ஆங்கிலமுஞ் சிறக்கக் கற்றல்
திகழுறுநற் கலைபலவுந் தெளிதல் உண்மை
ஆர்ந்துநிறை அகப்பொருளின் அருமை யாய்தல்
அதுவழங்கும் துறையினெறி ஒழுகி அன்பின்
தேர்ந்தமனைக் கிழத்தியின்றோள் மருவி இன்பத்
தேனுகர்தல் இளமைநலம் செழிக்கப் பெற்றுச்
சாந்தமுயர் கருணைமறம் தழைக்க வாழ்தல்
தலைமகனின் தலையாய கடமை யாமே! 69

## இருபாலார்க்கும் இயைபுறு கடமைகள்

தாய்முலைப்பா லுடனுண்ட தமிழைப் பேணல்
தமிழரொடு தமிழினிலே தகவாய்ப் பேசல்
பேய்முலைப்பால் தரவந்த பெற்றி யென்னப்
பிறமொழிகள் தம்மைப்பே துறுக்கா வண்ணம்
ஆய்மொழியின் சிறப்புணர்தல் உணர்த்தல் அன்பின்
அருந்தமிழிற் பலகலையும் அவரு மாறிங்
கோய்வொழிய உழைத்தல்குறள் நெறியில் நிற்றல்
ஒண்டமிழர்க் குயரறமீ தோர்கு வாயே! 70

பின்னர்த்துயின்று முன்னர் எழுந்து காலைக் கடனை முடித்துக் கவினுற நின்ற தலைவிக்குக் கதிரவனெழுங் காட்சியைக் காட்டுதல்:-

கருங்கடல்செம் பொன்போர்த்த கவின தோர்ந்து
கயமனைத்தும் கண்விழித்துக் கண்டால் என்ன
ஒருங்குமலர் கமலங்காண்! உதயக் குன்றின்
ஒளிறுமணி முடியெனவங் குற்று வெய்யோன்
அருங்கிரணக் கைநீட்டி அல்லை வாரி
அவாவடங்க விழுங்குதல்காண்! அழக தார்ந்து
நெருங்குவளைக் காங்காந்தள் காட்டும் மின்னே!
நிலையிழிந்தார் எனமதியும் மழுங்கல் காணாய்!

துயில்கின்ற மன்பதையின் சோர்வு நீங்கத்
துதைந்துநின்ற இருளகலச் சுடர்கால் கொள்ள
அயர்வின்றி இராமுழுதும் இமையா நின்றங்
கசதியுறும் உடுவினங்கள் ஓய்வு கொள்ளப்
பயில்கின்ற பறவைநிரை பாடி யாடப்
பசியசெடி கொடிமரங்கள் பரிந்து பூக்க
கயல்வென்று பிறழுநெடுங் கண்ணாய்! காலை
கவினுற வந்திடுநற் காட்சி காணாய்! 72

தென்றல் தவழ்ந்து மன்றல் கமழ்ந்து தேனருவி பாய்ந்து தீந்தமிழ் மணங்கொழிக்கும் திருக்குற்றால வரையின் ஒருபால் அடர்ந்தோங்கிய சந்தனச்சோலையினைச் சார்ந்து இயற்கை எழிலை அனுபவித்துக் கொண்டிருக்குங் காலை, தலைவி தன்னருகிலிருக்கும் பொழுது ஏற்படும் இன்பப்பெருக்கின் எழில் இற்றென இயம்புதல் :—

தென்றல்வரும் இன்பம்வரும் அன்பும் நம்மைத்
தேடிவரும் திருவும்வரும் செவ்வி தானே;
மன்றல்வரும் அழகுவரும் இளமை தானும்
மருவவரும் மணங்கலந்த மாட்சி காணக்
குன்றில்வரு களிறதுவும் பிடியி னோடு
கூடிவரும் காதலெனும் கொம்பில் வாழும்
அன்றில்வரும் மான்கள்வரும் மகிழ்வு கொள்ளும்
அமுதனையாய்! நீயெனருகிருக்குங் காலே! 73

இந்தியெதிர்ப்பு இயக்கத்தின் போழ்து தமிழ்மக்களிடையே தோன்றிய எழுச்சியினை இசைத் தமிழில்அமைத்து இசைத்திடுக என்ற தலைமகன் களிபேருவகை கொள்ளத் தலைவி பாடுதல் :—

தண்டமிழ்நாட் டிந்தியினி அரசோச்சு மென்ற
தகையுணர்ந்து தீக்குளித்தார் தகையென்ன தகையே
—அந்தத்
தகையுணர்ந்தும் வணங்காதார் தலையென்ன தலையே!

கண்டவாய தமிழ்ழியும் என்றவுரை கேட்டுக்
கடுகியெழுந் தணிதிரண்டார் கவினென்ன கவினே—
அந்தக்
கவினுணர்ந்தும் காணாதார் கண்ணென்ன கண்ணே!

மண்டுபுகழ் மொழியழியின் மருவுமிழி வென்று
மறங்கொண்டு பொருதழிந்தார் மறமென்ன
மறமே—அந்த
மறமுணர்ந்தும் மதியாதார் மதியென்ன மதியே!

பண்டைமொழி எங்கள் தமிழ் என்றுபரி வோடு
பரிந்துவந்து சிறைபுகுந்தார் பரிவென்ன பரிவே—
அந்தப்
பரிவுணர்ந்தும் பதறாதார் பசியென்ன பசியே!

செந்தமிழை இந்தியர வடுமெனவுள் நொந்து
தென்றலெனத் தீக்குளித்தார் திறமென்ன திறமே
—அந்தத்
திறனுணர்ந்தும் வெதும்பாதார் திடமென்ன
திடமே!

சந்தமிகு தமிழன்னை தனியரசு காணத்
தமிழர்படை திரண்டெழுந்த சமரென்ன சமரே
—அந்தச்
சமருணர்ந்தும் உருகாதார் சால்பென்ன சால்பே!

அந்தமிழின் நறும்பொழிலில் இந்தியெனும் ஆட்டை
அணுகவிடா தெதிர்த்தழித்தார் அழகென்ன
அழகே—அந்த
அழகுணர்ந்தும் உணர்வுகொளார் அகமென்ன
அகமே!

சொந்தமெங்கள் மொழிகாக்கத் துயர்பொறுத்தல்
என்றே
துணிந்துவந்து சிறைபுகுந்தார் துடுக்கென்ன துடுக்கே
—அந்தத்
துடுக்குணர்ந்தும் நாசகற்றார் சொகுசென்ன
சொகுசே!

தங்குபுகழ்த் தமிழுயரத் தமதுயிரைத் தந்த
தண்டமிழர் மொழிப்பற்றின் தரமென்ன தரமே—
அந்தத்
தரமுணர்ந்தும் போற்றாதார் தருக்கென்ன தருக்கே!

எங்களுயிர் எங்கள் தமிழ் என்றுமகிழ் வாக
இந்தியெதிர் துறவெகுண்டார் எழிலென்ன எழிலே—
அந்த
எழிலுணர்ந்தும் ஏத்தாதார் இயல்பென்ன
இயல்பே!

மங்குமிவித் தமிழ்தெனுங் கொடியவுரை கேட்டு
மனம்புழுங்கி யுடன்றழிந்தார் மாண்பென்ன
மாண்பே—அந்த
மாண்புணர்ந்தும் வாழ்த்தாதார் வாயென்ன
வாயே!

பொங்குதமிழ் புரத்தலறம் என்றுபொலி வோடு
புழுங்குசிறை புகுந்துழன்றார் பொறையென்ன
பொறையே—அந்தப்
பொறையுணர்ந்தும் புகழாதார் பொலிவென்ன
பொலிவே!

அமிழ்தினிய தமிழ்க்கவலம் இந்தியதால் என்ன
அரியவுயிர் தனைவெறுத்தார் அறமென்ன அறமே—
அந்த
அறமுணர்ந்தும் திருந்தாதார் அறிவென்ன அறிவே!

தமிழினிய குலமகண்முன் இந்தியெனும் பரத்தை
தருக்குவள் கொல்! எனவெழுந்தார் சதுரென்ன
சதுரே — அந்தச்
சதுருணர்ந்தும் வியவாதார் தகவென்ன தகவே!

தமிழினிய அழகிளமை அமுதமொழி அன்னாய்!
கலங்கல்எனக் களம்பட்டார் களிவென்ன களிவே—
அந்தக்
களியுணர்ந்தும் செறியாதார் கருத்தென்ன
கருத்தே!

தமதுகுடி பதவியெனும் சழக்கர்கொணர் இந்திச்
சனியெதிரச் சிறைசென்றோர் சமர்த்தென்ன சமர்த்தே
—அந்தச்
சமர்த்துணர்ந்தும் விழிகொளார் சடமென்ன
சடமே! 77

மாலைக்காலத்தே தலைவி பிறைகண்டு மகிழ்ந்த பொழுது, உடுக்கள் என்றும் போல் இமையாநிற்க, அன்று நின்முகமதிக்கு இணையெனவந்து தோற்றோடிய நிலவு இன்றுன் நுதலினை நிகர்க்கவேண்டிப் பிறையாகி வந்துற்ற கோலங் காண் எனத் தலைவன் கூறுதல் :—

வேறு

பச்சென்ற புற்றரையில் முத்தை அள்ளிப்
பாங்குறவே தெளித்ததென நீல வானில்
அச்சமுற உடுவினங்கள் இமையா நிற்க
அணியிழைநின் முகமதிக்கன் றுடைந்து தோற்றுத்
துச்சமெனத் திரிமதியும் பிறைய தாகித்
துணிந்துவந்துன் நுதலென நிலைல் காணாய்!
இச்செனநல் முத்தமளித் தணைத்து நிற்கும்
எழிற்கொடியே! நறுமலரே? இன்பத் தேனே! 78

வயங்கிழாய்! வானம் மாண்புடைமங்கையரைப் பொருவுதல் காண் எனல்:—

வேறு

காம்பற்ற குடைய தென்னக் கவினின் றுலகை
யோம்பித்
தான்பெற்ற மணிகள் ஆன தகவுறு கதிர்கள் தாமும்
சோம்பற்றங் கியங்கி நல்ல சுடர்விடச் செய்யும் வானம்
மான்பெற்ற விழியாய்! மாதர் மாட்சிமை நிகர்த்தல்
ஓராய்! 79

தலைவியும் தலைவனும் தென்றலில் திளைத்துத் தேனருவி படிந்து மன்றல்கமழ் மலர்ப்பொழிலின் மருவி மகிழ்தல்:—

வேறு

தென்றலிலே திளைத்தாடு வோம்நாம் முன்னர்
தேனருவி படிந்துமகிழ் வுறுவோம் பின்னர்
மன்றல்கமழ் சோலைவளர் மலையின் ஏறி
மாண்புறநற் குன்றினெதிர் கூவி நின்று
துன்றுமெழில் ஆரமுயர் சூழல் சேர்ந்து
தோகையுன தருகிருந்து சொக்கும் அன்பின்
ஒன்றல்ல பலவின்பம் உறுவோம் மின்னின்
ஒளிர்கொடியே! ஒண்பவள இதழ்கொள்மானே! 80

ஆரம்வளர் சோலையில் அமர்ந்து மகிழ்காலை, பண்டு தண்டமிழ் வளர்த்த ஒண்டிறற் குரிசில்களில் ஒள்ளியோர் சிலரை உரைத தருள்க வென்று தலைவி வேண்டத் தலைமகன் கூறுதல்:—

**பண்டு இறைவனுல் ஆய்ந்த பெருமையினையுடையது நம் பைந்தமிழ் :—**

சேவேந்தும் பெருமானும் சேவ லோனும்
செந்தமிழை ஆய்ந்தவுயர் செம்மை போற்றி
மூவேந்தர் தமிழ்புரந்த முறைமை போற்றி
முந்துறுமொண் டமிழ்க்குழவி முசியா வண்ணம்
பாவேந்தர் கழகமெனும் தொட்டில் ஏற்றிப்
பாவெனுந்தா லாட்டுவளர் பண்பு போற்றி
காவேந்து வளமருவிக் கல்வி நாட்டின்
கனித்தமிழ்கோ லோச்சியநற் கவின்தான் போற்றி

### அதிகமான் குமணன் ஆகியோர் அருந்தமிழ்ப் பணி:—

*அன்னைமொழித் தமிழ்வளர ஔவை வாழ*
*அருநெல்லிக் கனியளித்த அதியர் கோமான்*
*மன்னுயிரை போற்றியவன் மாண்பு போற்றி*
*வறுமைகெடப் பொருள்தருக வள்ளால் என்று*
*தன்னையடை புலவனுக்குத் தலையை ஈந்த*
*தலைக்கொடையன் குமணனது தகைமை போற்றி*
*முன்னைமொழி பலவினுக்கும் முன்ன தாகி*
*முருகிளமை கொழிதமிழ்த்தாய் முதன்மை போற்றி!* 82

### பாரிவள்ளலின் பண்புடைமை

*முன்னையொரு முல்லைக்குப் பொற்றேர் ஈந்து*
*முந்நூறூர் பரிசிலர்க்கு முறையின் நல்கி*
*அன்னையுயர் தமிழ்வளர்த்த அருள்சேர் பாரி*
*அருங்குணங்கள் போற்றியவன் ஆண்மை போற்றி*
*பின்னைவரும் வள்ளல்களின் கொடையாம் பெட்பால்*
*பிறங்குதமிழ்ப் பயிர்செழித்த பீடு போற்றி*
*தன்னைநிகர் தானேயாய்த் தழைக்கும் நல்ல*
*தண்டமிழ்த்தாய் இளமைகொழி தகவு போற்றி!* 83

### திருமாவளவனின் சிறப்பு

*பொன்னிநதிக் கிருகரையும் பொருந்தக் கட்டிப்*
*புனல்வளமும் நிலவளமும் பொதுளச் செய்த*
*சென்னிகரி காலவளவன் சிறப்புப் போற்றி*
*செருக்கியெதிர் வடவர்கெடச் செண்டு கொண்டு*
*மன்னுமிம கிரிதிரித்த வலிமை போற்றி*
*மருவுமவன் புகார்நகரின் மாண்பு தன்னைச்*
*சொன்னபுலவோன் மகிழச் சுடர்செய் செம்பொன்*
*தொகைபதினா றிலக்கமளி தூய்மை போற்றி!* 84

**சேரன் செங்குட்டுவன் ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன் ஆகியோரின் அருந்திறல் :...**

தமிழைஇகழ் வடவர் தலைக் கல் ஏறத்
தமிழர்புகழ் வடவரையில் கல்லை ஏற
இமிழ்கடல்சூழ் புவிநெரியப் படைநடாத்தி
இகல்வெல்செங் குட்டுவன்றன் ஏற்றம் போற்றி
அமிழ்தினிய தமிழ்மதி யாத பொல்லா
ஆரியரின் படைகடந்த அமுதம் அன்ன
உமிழ்திசைகொள் நெடுஞ்செழியன் ஒட்டம் போற்றி
ஒண்டமிழுக் கவனளித்த உயர்வு போற்றி! 85

**பெருஞ்சேரல் இரும்பொறை முதலியோர் பெருந்தகைமை**

அன்றைநாள் புலவர்தமிழ் ஏற்றல் ஒன்றே
அரியதவப் பேறதெனக் கொண்ட தன்றிப்
பின்னையவர் மொழிவழியின் ஆட்சி செய்து
பிறங்குபுகழ் வளர்மன்னர் பீடு போற்றி
முன்னைவரு களைப்பதற முரசு கட்டில்
முறையறியா ததிற்றுயின்ற மோசி யென்னும்
பொன்னனைய புலவனுக்குக் கவரி வீசும்
பொற்புமிகு பெருஞ்சேரல் புகழ்தான் போற்றி! 86

**தமிழ்வளர்த்த சான்றோர்களின் தாள்கள் எம்தலைக்கு அணியாகுகவெனல்:-**

சங்கம்வளர் இனியதமிழ் ஆய்ந்த சான்றோர்
தண்டமிழில் இறையருளைச் சாற்றும் ஆன்றோர்
புங்கமுறும் அமுதினிலும் புனித மான
பொருளினிலக் கணம்வகுத்த புரைதீர் நல்லோர்
பொங்குமுயர் அறம்பலவும் தமிழின் கண்ணே
பொதுளும்வகை யுரைத்திட்ட புலமை யாளர்
தங்குபுகழ்த் தமிழ்வளரத் தாமும் வாழ்ந்த
தகவுளாரெவர் அவர்பதமெம் தலைமேற் கொள்வாம் 87

## பண்டைய மறக்குடி மகளிரின் மாண்பினைப் பராவுதல்

*அன்னையினும் இனியதமிழ் மரபின் நல்லார்*
*அருமையினை எடுத்தியம்பல் அமையுங் கொல்லோ!*
*என்னையென்றன் மகன்முதுகில் வடுவுண் டாமேல்*
*எனதுமுலை தனையறுத்திங் கெறிவேன் என்று*
*கன்னியவள் களம்புகுந்து தனது காளை*
*கணையகலம் போழ்ந்திடவீழ் கவின தோர்ந்து*
*முன்னையினும் பெருமகிழ்வு கொண்ட அந்த*
*மூதின்மறக் குடிமகளிர் மொய்ம்பு போற்றி!* 88

*என்னைநடு கல்லின்றன் எந்தை பட்டான்*
*எழிற்றமையன் போரேற்றுப் பொருது வீழ்ந்தான்*
*முன்னைவரு நமதுதமிழ் மரபின் பாங்கும்*
*முந்துறுநன் மறக்குடியின் மொய்ம்புந் தோன்ற*
*அன்னையென தகமகிழ அடங்கார் வீழ*
*அருஞ்சமர்செய் திடவெழுக மதலாய் என்று*
*தன்னிருகண் அனையவிளம் மகவைப் போர்க்குத்*
*தகவுடனே செலவிடுத்தாள் தறுகண் போற்றி!* 89

**தமிழர்களுக்கு மொழிப்பற்றை அருள்க வெனத்தமிழ்த் தாயை வேண்டல்:-**

*எம்மொழிக்கும் முன்னருதித் திளமை குன்றா*
*தெழின்மருவும் பொருளிலக் கணமும் ஏய்ந்து*
*செம்மொழியாய் உயர்தனிச்செம் மொழிய தான*
*செழுந்தமிழே! பைந்தமிழே! தெளிந்த தேனே!*
*தம்மொழியின் தகையுணரார் தமிழ ரென்ற*
*சழக்கர்களுந் தன்னையர்தமிழ்ச் சால்பு மேவி*
மும்மொழியின் இட்டமென மொழியும் பொல்லா
*மோகமவித் துயரவருள் புரிகு வாயே* 90

கண்டினும் இனிய ஒண்டமிழ் வளர்த்த தண்டமிழ்ச் சான்றோர் திண்டிறல் கேட்டு உள்ளம் நெகிழ்ந்த இன்பவல்லி இன்னிசை யாழினைக் கையிலேந்தி என்றுமுள தென்றமிழ் ஏற்றமெய்தித் திகழ்கவென. இசைத்தமிழில் பாடுதல்:-

குயிலே! நீ கூவாய் நின்றன்
குழலினு மினிய மழலைமொழி கொண்டு (குயிலே)
எங்கள்
கொத்தான முத்தமிழ் இத்தாரணி யாள (குயிலே)

மயிலே! நீ ஆடாய் நின்றன்
மாண்புறு தோகையைக் காண்புற வேவிரித்து (மயிலே)
இந்த
மண்டல மீதிலெம் ஒண்டமிழ் வாழ்கென (மயிலே)

அயலேய் கிளிசொல்லாய்! நின்றன்
அமுதான உரையெற்குத் தமிழாய் இனித்திட (அயலே)
எங்கள்
அன்னை மொழித்தமிழ் முனைப் பெருமைபெற (அயலே)

புயலே! நீ பொழிவாய் நின்றன்
பொறபார் கொடைக்குணம் அற்பு மிகுத்திட (புயலே)
எங்கள்
பூந்தமிழ் தீந்தமிழ் ஏந்துக சீரென (புயலே)
9

குற்றாலத்தின் கொழிக்கும் வளங்கண்டும் கொஞ்சு தமிழில் நெஞ்சினிக்கப் பாடியும், குயிலொடு மாறு கூவியும் மயிலொடு மாறாடியும் நின்றிழி அருவியில் ஒன்றுபடத் தோய்ந்தும், மலர் கொய்தும், மருவி விளையாடியும் தேனிலவு துய்த்த தலைவனுந் தலைவியும் ஊர் திரும்புங்கால் நானிலவளங்களையும் நங்கைக்கு காட்டி மகிழ்தல்:—

## குறிஞ்சிக் காட்சி

குன்றெதிர் கூஉயும் குரவை யாடியும்
தென்றலில் திளைத்தும் மன்றலில் மகிழ்ந்தும்
அருவியிற் படிந்தும் அணிமலர் கொய்தும்
குருவி யோப்பிநற் குளிர்புனங் காத்தும்
தேனுந் தினையும் விருந்தினர்க் களிக்கும்
வானின் உயர்மலை வல்லியர் தந்துணைக்
கானவ ரோடு களித்துறை வரைப்பும்
மயிலும் மானும் மருவியா டுக்கமும்
பயிலும் இன்னிசைப் பறவைசேர் பொதும்பரும்
அகிலும் சாந்தமும் அசோகுநிறை சாரலும்
முகில்தவழ் சோலையும் முழங்குதண் அருவியும்
கண்டோர் உள்ளம் கவர்ந்தெழு தகைத்ததாய்க்
குறிஞ்சியின் வளனெலாங் குலவிடல் காணாய்! 92

## முல்லைக் காட்சி

கொல்லேறு தழுவிநற் கோதையர் வேட்ட
நல்லே றனைய நடையுடைக் காளையர்
வீயவிழ் தாரகம் விளங்கச் சூடி
மாயவன் பின்னையோ டாடிய வாடலைத்
தூயதந் தோள்புணர் துணையொடும் ஆடிக்
கோங்கரும் பணிமுலை, கொடியிடை, தவளநகை,
தீங்கரும் படுசொல் திங்கள்வாண் முகத்தியர்
பாங்குநின் றகநெகப் பசுநிரை சூழ்வர
வேய்ங்குழ லூதியும் விளையாட் டயர்ந்தும்
ஆவினங் காத்தும் அதன்பயன் கொண்டும்
பூவினல் லின்பம் பொதுள வாழ்ந்திடும்
ஆயர்சேர் முல்லை அணிநலம் பாராய்! 93

## மருதக் காட்சி

தயங்கிதழ்த் தாமரைத் தடாகத் தாங்கண்
முயங்கி நீராடும் முளரித் திருவனைய
மங்கையர் வதனமும் மலர்ந்த கமலமும்
சங்கையுற் றுணருநற் றகையின் றயங்கிய
வண்டினம் மயங்கி வரைந்திசை பாடும்
தண்புனற் படப்பை சால்புற வமைந்து
மங்கல விழவயர் மனைமலி பெருநகர்
எங்கணும் ஏழிசைப் பாடலோ டாடல்
பொங்க நல்லிசை யாண்டும் பொதுள
மஞ்சளும் இஞ்சியும் வாழையும் மாவும்
மஞ்சு தைவருங் கமுகும் தெங்கொடு
தங்கும் உயிர்கோர் தனியமு தொத்திவ்
விருநிலம் புரக்கும் இணையறு சாலியின்
பெருவளங் கவினிய மருதவைப் பாமிதன்
அருமையைக் காணென தாருயிர் அன்னமே! 94

## நெய்தற் காட்சி

கடல்படு வளனெலாங் கலந்தரு திருவுடை
அடல்கெழு திரையர்தம் அகம்நெகிழ் வுறும்வகை
புன்னைப் பூவீழ் புதுமணற் பாங்கர்
மின்னெனல் நுடங்கிடை விளங்கிழை மகளிர்
மாழை யுண்கண் மானும் நெய்தலொடு
தாழை வெண் டோடு தகைபெறச் சூடிப்
பொய்தல் அயர்ந்து புனல்விளை யாடும்,
நெய்தலங் கானல் நீள்நலம் பாராய்! 95

தேனிலவு துய்த்தும், நானிலவளங் கண்டும் ஊர் திரும்பிய தலைவனும் தலைவியும் இல்லத்திருந்து நல்லறம் மேற்கொள்கின்றனர். பெற்றோர் பெருமகிழ்வு பூத்தனர். கற்றோர் கனிவுடன் வாழ்த்தினர். தங்கள் இல்லிற்குப் "பூந்

தமிழ்ப் பொழில்" எனப் பெயரிட்டுப் பெயருக்கேற்பக் கண்டோர் இஃதொரு கலைப்பூங்காவே என்று கருதும் வண்ணம்பலதுறைத் தமிழ் நூல்களையும் பாங்குபெறத் தொகுத்துத் தாங்களும் கற்றுப் பிறர்க்கும் கற்பித்துத் தமிழ் மணம் கமழச் செய்தனர். இயலும் இசையும் எழில்நடம் புரிந்தன. ஒண்டமிழ் கற்பார்க்கு அஃதோர் ஊருணியாயிற்று. மனையறம் மாட்சியடைந்தது. இன்பவல்லியும் ஓர் எழின் மகவுக்குத் தாயாயினள். தமிழ்தந்த செல்மாதவின் செந்தமிழ்ச் செல்வன் எனப் பெயரிட்டுச் சீராட்டிப் பாராட்டி மகிழ்வாராயினர்.

இன்பக் கொடிதழைத் தெழிற்கொம்ப ரிற்படர்ந்து.
அன்புக் கிலக்காம்நல் அருந்தமிழ்ச் செல்வமீன்று
தென்புக் குறையுளாய்த் திகழ்ந்தே நிந்தமிழ்போல்
இன்பக்குஞ் செய்ய இளமைக்கும் ஏற்றமீந்தே 96

வாழ்க மனையறம்! வெல்க தமிழன்பு!!

முதற்பாகம் முற்றிற்று.

# இன்ப வல்லியின் எழில் ஓவியம்.

—( இரண்டாம் பாகம் )—

இந்தியெதிர்ப்புஅணிச் செயலாளர் என்றமுறையில் அதன் வளர்ச்சிகருதித்தான் சென்னையில் இருத்தலே சிறப்புடைத்தென எழிலரசு குடும்பத்துடன் சென்னை வாழ்க்கையை மேற்கொண்டனன். இல்லம் பூந்தமிழ்ப் பொழிலாய்ப்புதுமணம் பரப்ப ஆரம்பித்தது. முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளாய்ப் பின்னைப் பெருமைக்கும் பேர்த்தும் அப்பெற்றிய தாய அன்னை மொழித்தமிழ் வளர, தமிழினுயர்வு உணர்ந்து தமிழர்கள் வீறுகொள, தம்கொள்கை வலுப்பெற, நாடுநலம்பெற, நல்லாட்சிமலர 'பூந்தமிழ்ப்பொழில்' வெளியிடாக, இலக்கியம், இலக்கணம், கவிதை கட்டுரை, கதை, அரசியல், பொருளாதாரம், அறிவியல், உளவியல் போன்ற பல துறைப்படைப்புக்களையும் தாங்கி வெளிவரும் 'பைந் தமிழ்ப்பூங்கா' என்னும் திங்களிதழ் ஒன்றினையும், 'வெற்றிமுரசு' என்னும் தீந்தமிழ் நாளிதழ் ஒன்றையும் நலம்பட நடத்திவரலாயினன்.

## தமிழகத் தலைநகரச் சிறப்பினைத் தலைமகட்குக் காட்டி மகிழ்தல்:

### தலைநகரக் காட்சி.

குறிஞ்சியும் முல்லையும் மருதமும் நெய்தலும்
ஒருங்குதலை மயங்கி வளம்பல கவினிய
தண்டமிழ் அகத்தின் தலைநகர் ஆங்கு
எண்டருஞ் சிறப்பினை எழில்பட உடுத்தலாள்

மாநிலம் அன்றித மண்டுபல் நலமிகும்
மேனில மேயென மேலினர் வியப்பவும்,
குன்றம் பல்லுருக் கொண்டோருங் குற்றென
மன்றந் திகழ்மணி மாடநிரை ஓங்கவும்
கங்கையும் யமுனையும் கலந்தவை கடுப்பப்
பொங்குநல் தெருக்கள் பொற்புறக் கூடவும்.
அகவிருள் அகற்றி ஆங்கொளி பரப்பும்
பகலவன் அனையபல் பள்ளிகள் தம்முடன்
கலைபல வழங்குகல் லூரிகள் நிரம்பவும்
தமிழ் தழீஇய சாயல் தையலார் ஆடலோடு
அமிழ்தெனத் தகையினோம் அங்கவர் பாடல்சேர்
இன்னிசை அரங்கம் ஏற்றமுற் றிலங்கவும்
கருங்கடல் முகந்துநீள் கார்வரை உறல்போல்
பெரும்பொருள் கொணர்ந்து பிறங்குபல் கலங்கள்
வந்துநின் றணிசெயும் துறைநனி வயங்கவும்
இயற்கையின் தன்மை இடையிடை யொளிரச்
செயற்கையின் கோலம் செறிந்தரசு ஓச்சும்
சென்னையம் பதியிது செயிழை காணென். 97

தலைவனும் தலைவியும் ஒருநாள் மாலை, பொழுது போக்காகக் கடற்கரைக்குச் சென்றிருந்த காலை நடந்த ஒருசிறிய உரையாடல்:—

(வேறு)

இந்திப்பேய் தன்னையெதிர்த் தெங்களண்ணு
செய்சமரில்
முந்திப்போய் நின்று முழங்குவார்யார்? —மந்திரித்
தானும் பதவி தனைவிடா மந்திரிகள்
போலும் நிலத்துப் பொறை. 98

தாய்த்தமிழைப் பேணாது தன்னலஞ்சேர் காங்கிரஸார்
பேய்த்திமிர்கொண் டிந்தியினைப் பேணுவதென்?
—காய்த்த
பலாவிருக்கக் காஞ்சிரங்காய் பற்றவிழை அந்தக்
குலாமருக்கும் உண்டோ குணம். 99

எந்தமிழ் இன்றமிழ் எம்முன்னோர் தந்ததமிழ்
செந்தமிழ் செந்தமிழ் செந்தமிழே! — அந்தமிழின்
பாங்கறியாக் காங்கிரசார் பைந்தமிழைக் காப்பார்
கொல்!
ஈங்கறிவார்க் கேதத் திறம். 100

மந்திக்கும் இந்திக்கும் மாற்றமிலை என்றதனைச்
சந்திக்குந் தான்கொணர்ந்த சான்றோன் யார்?-முந்தித்
தனித்தமிழைத் தோற்றுவித்துத் தண்டமிழைக்
காத்த
இனித்த மறைமலையே யாம். 01

வங்காள மென்று வழங்கலால் கல்கத்தா
வங்காள மாகாத வண்ணம்போல் — மங்காத
அன்னை மொழியால் அமைந்த தமிழ்நாட்டைச்
சென்னையெனும் காங்கிரசே! நீ. 102

பாங்கார் மராட்டியத்தைப் பம்பாய் என்றாங்க
வார்கள்
இங்கார் பெயர்சுமக்கச் செய்தனரோ?
—ஏங்காணும்
ஈந்தமிழ்நா டென்னிற் சீறுமோ? தம்பதவி
சாந்துணையும் அந்தோ சதம். 03

(வேறு)

தாய்மொழியைப் போற்றாது தருக்குகின்ற நாடெது
காண்?
தாய்மொழியைப் போற்றாது தருக்குவது தமிழ்
நாடே.
தாய்மொழியின் புலமையினால் தகவிழப்பார்
யாவர்சொல்?
தாய்மொழியின் புலமையினால் தகவிழப்பார்
தமிழர்களே. 104

தாய்மொழியை நன்கறியார் தலைமைபெறல்
எங்கே காண்?
தாய்மொழியை நன்கறியார் தலைமைபெறல்
தமிழகத்தே.
தாய்மொழியைக் கொலைபுரியும் தறுதலைகள்
யாவர்சொல்?
தாய்மொழியைக் கொலைபுரியும் தறுதலைகள்
தமிழர்களே. 105

தாய்மொழியை வளரவிடாச் சழக்கர்கள் எங்குளர்
காண் ?
தாய்மொழியை வளரவிடாச் சழக்கருளார்
தமிழகத்தே.
தாய்மொழியின் உயர்வுணராத் தகவிலிகள் யாவர்
சொல் ?
தாய்மொழியின் உயர்வுணராத் தகவிலிகள் தமிழர்
களே .06

தாய்மொழியிற் பேசிடற்குத தயங்கிடுதல் எங்கே
காண் ?
தாய்மொழியிற் பேசிடற்குத் தயங்கிடுதல் தமிழகத்தே
தாய்மொழியை மதியாத தனையர்களும் உண்டுகொல்?
தாய்மொழியை மதியாதார் தமிழரென்று
சொல்லுவர் காண். 107

ஃ ஃ ஃ

சாதியின் பெயரால் ஒட்டுப்பெறும் சதியை நினைந்து இரங்குவது போன்று இருங்கடலும் இரைச்சலிடுகின்றதெனல்:—

வேறு

குலந்தனிலே உயர்வின்று தாழ்வின்றென்பார்
குடியாட்சி யென்பார்பின் சாதிப் பேரால்
கலந்தனிலே தூண்டியின்மீன் பிடிப்பார் போன்று
சதுராக ஓட்டுதனைச் சுருட்டல் கண்டு
நிலந்தனிலே உயர்ந்ததமிழ் அகத்தே இந்த
நிலையோ! என் றிரங்கிடும் இரைதல் காணாய்!
நலந்தனிலே கடைந்தெடுத்த அமுதம் அன்னாய்!
நாடுநல முறச்சாதி யொழிதல் வேண்டும். 108

1965 இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் எழிலரசுடன் இணைந்து நின்று உழைத்த, சென்னை மாநிலக் கல்லூரி மாணவனாகிய கண்ணன் என்னுமோர் கயவன் காங்கிரசாரின் கைக்கூலியாக மாறிவிடுகின்றான். 'இந்திய ஒருமைப் பாட்டைக் கட்டிக் காக்க வேண்டுமானால், பொது மொழி ஒன்று இன்றி அமையாதது என்றும், இந்தி ஆட்சி மொழி ஆவதால் தமிழுக்கு எந்தவித ஊறும் நேர்ந்து விடாது என்றும், எனவே, இந்தியைப் பொதுமொழியாக ஏற்றுக்கொள்வதில் தவறில்லை என்றும்' எழுதியும் பேசியும் வரலாயினன்.

எழிலரசும் இன்பவல்லியும் சென்னை வாழ்க்கையை மேற்கொண்ட சின்னாளில் கண்ணன் எழிலரசைச் சந்தித்துத் தனது கொள்கை மாற்றத்திற்குரிய காரணங்களைக் கூறித் தன்கருத்துக்கு ஆதரவு தேடியதோடு 'இந்தி எதிர்ப்பு இயக்கத்தைக் கைவிட்டுக் காங்கிரசில் சேர்ந்து உழைக்க முன்வரின் பெரிய மனிதர்களின் தயவு, பணம், பட்டம், பதவி முதலியன எழிலரசை நாடி அடைவதுடன் சிறந்த எதிர்காலமும் அவனுக்காகக் காத்துக்கிடக்குமெனவும்' கூறினன்.

தன் நண்பனின் போக்குக்குறித்து எழிலரசு வியப்பும் வேதனையும் அடைகின்றான். அவனைத் திருத்தப் பலவழிகளிலும் முயன்று தோல்வி உறுகின்றனன். கண்ணனோ அமையம் வாய்க்கும்பொழுதெல்லாம் இந்தி எதிர்ப்பு இயக்கத்தைக் கைவிடுமாறும், காங்கிரசில் சேர்ந்து பயன் பெறுமாறும் எழிலரசை வற்புறுத்தி வந்தனன். அவனது தீய உரைகளைக் கேட்ட எழிலரசு சினமிக்கவனாய் 'குரங்கு தான்கெட்டதுடன் வனத்தையும் அழித்த கதைபோல' தாய்மொழியை மறந்த பழிச் செயலுக்குத்தான் ஆளானதோடு மற்றவர்களையும் அத்தகைய இழிசெயலில் ஈடுபடும்படி தூண்டுதல் தகாதெனக் கண்டித்து அவனது நட்பினை வெறுத்தொதுக்கி விடுகின்றான்.

அதைத் தொடர்ந்து கண்ணன் எழிலரசுக்கு எதிராக மிக இழிந்த முறையில் எழுதியும் பேசியும் வந்ததோடு பல சதித்திட்டங்கள் தீட்டி இடர் பல விளைத்தும் வருவாராயினன்.

"அடுக்கி வரினும் அசைவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும்"

என்னும் பொய்யாமொழிக் கிணங்க எழிலரசுக்கு இழைக்கப்பட்ட இன்னல்கள் யாவும் இன்னலுற்றழிந்தன.

எழிலரசு தனது நாளிதழாகிய 'வெற்றி முரசில்' தமிழ் ஆக்கம் பெற்றுயர்தற்குரிய வழிவகைகளை மிக விளக்கமாக எழுதி வந்ததுடன், நற்றமிழ் வளர—ஏற்ற முற—நாட்டில் நல்லாட்சி மலரவேண்டியதன் அவசியத்தையும் தெளிவுபடுத்தி வந்தனன்.

கண்ணனோ, எழிலரசின் எழுத்தும் சொல்லும் இந்திய ஒருமைப் பாட்டிற்கு ஊறுவிளைக்கும் தன்மையன எனவும் நாட்டில் அமைதியின்மையை விளைத்துப் புரட்சிக்கு அடிகோலும் பாங்கில் அமைந்துள்ளன எனவும் கூறி ஆட்சியாளருக்கு அச்சத்தையும் ஆத்திரத்தையும் ஒருங்கே உண்டாக்குகின்றான்.

இழிமகனாகிய கண்ணனின் புல்லுரையைப் பொருளுரையாகக் கொண்ட ஆட்சியாளர், 'மொழி வெறியை ஊட்டி அமைதிக்குப் பங்கம் விளைப்பதாகக் குற்றம் சாட்டி, தடுப்புக்காவல் சட்டத்தின் துணைகொண்டு எழிலரசையும் இன்பவல்லியையும் அவர்தம் மழலையாகிய செந்தமிழ்ச் செல்வத்துடன் சிறையிடைத் தள்ளுகின்றனர்.

சிறையிடை எழிலரசும் இன்பவல்லியும் எய்திய இன்னல்களுக்கோர் எல்லை இன்று. மூன்று திங்கள் கழிந்து விடுதலை பெறுகின்றனர். தம் தமிழ்ப்பணியைத் தொடர்ந்து நடத்துகின்றனர்.

அறுபத்தேழில் தி. மு. கழகம் பெரிதும் வெற்றிபெறும் வகையில் இந்நூல் இத்திருப்பணியின் சார்பான தேர்தல் பிரச்சார ஆரம்பவிழா பேரறிஞர் அண்ணா அவர்களால் 67 ஜனவரி முதல் நாளன்று சென்னையில் தொடங்கிவைக்கப்படுகின்றது.

## தலைவரின் தொடக்கவுரை

சமதர்மங்காண விழையும் நல்லுள்ளம் படைத்தவர்களெல்லாம் கழகவணியில் திரளுகவெனல்:—

வேறு

நாளெலாம் உழைத்து நலிவுதீர் வின்றி
நம்விதிப் பயனென வெம்பித்
தோளெலாம் கும்பித் துவண்டிடும் வறிஞர்
துன்பமா யினவகன் றிடத்தம்
தாளெலாம் தந்து தாய்த்திரு நாட்டைத்
தக்கவா றுயர்த்திட விழையும்
ஆளெலாம் வருக! அணிதிரண் டெழுக!
அரியநும் படைவெலும் முயல்வீர்! 109

### கூட்டுச்சேர்வதால் கொள்கையை விடவேண்டிய அவசியம் இல்லையெனல்

வேறு

*கூட்டணிதான் வெற்றிபெற உறைப்பீர் நல்ல*
*கொள்கையது வேறிங்குக் கூட்டு வேறு*
*நாட்டமுற இதையுணர்ந்து வாழ்வில் வந்த*
*நலிவதறப் பசிதவிர வறுமை யோட*
*ஓட்டதனை ஒருசிறிதும் சிதறா வண்ணம்*
*ஒருமுகமாய்க் கூட்டணிக்கே உரிய தாக்கி*
*நாட்டினிலே பகற்கொள்ளை அடித்து வாழும்*
*நயமற்ற காங்கிரசை வீழ்த்த வாரீர்!* 101

### மீண்டும் காங்கிரசை நம்பற்க எனல்:

*அரிசியொரு படிமூன்று ரூபாய தாச்சு*
*அரசியலார் தருமரிசி அவிய லாச்சு*
*விரசமிக விலைவாசி யேறிப் போச்சு*
*வீணர்களுக் கிதுபெரிய வரம தாச்சிங்*
*கரசுபுரி அமைச்சர்அதி காரி யானோர்*
*அணியணியாய்ப் பவனிவரல் சுரண்டல் ஏய்த்தல்*
*சரசமதாய்ப் போச்சிந்தச் சழக்கர் பேச்சில்*
*சபலமுறல் எதற்கின்னம் எழுவீர் இன்றே!* 111

*சுதந்திரத்தின் பயனை, ஏழை எளியவர்களும் அனுபவிக்குமாறு செய்தல் வேண்டுமெனல்:—*

*சுதந்திரத்தால் வாழ்வுவரும் வறுமை போகும்*
*சுகம்பெறுவோம் என்றநிலை மறைந்து மாளச்*
*சுதந்திரமும் பணம்படைத்த சிலர்க்கே அன்றித்*
*தொழில்புரியும் பாட்டாளிக் கல்ல வென்று*
*நிரந்தரமாய் நடைமுறையில் நிகழச் செய்யிந்*
*நீசருடை மோசமெலாம் எடுத்துச் சொல்லிச்*
*சுதந்திரமிங் கனைவருக்கும் உரிய தாகத்*
*தொண்டுசெய இன்றுறுதி கொள்வோம் நாமே!* 112

நம் கழகத் தலைவர், அண்ணு பேரறிவாளர் நாட்டுக்கும் நமக்கும் நல்லது செய்வார் என்னும் நம்பிக்கை உமக்குளதேல் உங்களது வாக்கைத் திறமை மிக்க நமது கழக வேட்பாளர்கட்கு நல்கி வாழ்வை வளம்பெறச் செய்யுங்கள் எனல்:—

அண்ணுநல் அறிவாளி நாட்டைக் காப்பார்
அனைவரையும் அணைத்தழைத்துச் செல்வார் ஒன்றே!
திண்ணமிவர் தமிழரசி செங்கோல் ஓச்சித்
திகழ்ந்திடநன் மணிமுடியும் அளிப்பார் என்ற
எண்ணநுமக் குளதாயின் எழுவீர்! இன்றே
எழின்மிக்க நும்முடைய வாக்கை நல்ல
வண்ணமுயர் வேட்பாளர் தங்கட்கு ஈக்கி
வாழ்வுவளம் பெற்றிலங்க வழிசெய் வீரே! 113

## இன்ப வல்லியின் உரை

மங்கையராக நாம் பிறந்த பயனை எய்த வேண்டின் நம் தமிழ்த் தாயை அரியணையில் இருத்துவதற்கு நாம் அயராது உழைத்தல் வேண்டுமென்ல்:—

தங்கையரே! தாய்மாரே, அண்ணி மாரே!
சாற்றுகின்ற வென்னுரையைத் தயவாய்க் கேளீர்!
மங்கையராய்ப் பிறந்தபயன் மருவ வேண்டின்;
மாண்புறுநற் றமிழர்குலம் உயர வேண்டின்,
சங்கையறத் தமிழன்னை ஆட்சி பீடந்
தனைமருவி முடிதரித்துச் செங்கோல் ஒச்ச
இங்கயரா தியாமுழைக்க வேண்டும் வேண்டும்
எழுந்திடுவீர்! பணிபுரிய எழுந்தி டீரே! 114

நாடு நலம்பெறக கழகத்தில் சேரவாருங்கள் எனல்:-

வறுமையெனும் பெருங்காட்டை வெட்டித் தள்ளி
வலிமைமிகு உழைப்பெனும் ஏர்கொண் டோட்டி
சிறுமைதரும் அறியாமை அறவே கல்விச்
செந்தமிழின் நறும்பயிரைச் செழிக்க நட்டிக்

கருமையுறும் களையான பழமை தன்னைக்
கட்டாகப் பிய்த்தெறிந்து கடமை யென்றும்
நறுமைகமழ் நீர்பாய்ச்சி நல்லறம் விளைத்து
நன்மைபெறக் கழகவணி நண்ணு வீரே! 115

தமிழாட்சி மலர்க விரைந்தென 1967 'தை' முதல் நாளன்று எழிலரசு தமது திங்களிதழாகிய பைந்தமிழ்ப் பூங்காவில் வெளியிட்ட பொங்கல் வாழ்த்து:-

வேறு

வானம் பெய்ய வளம்பெருக
வண்ணத் தமிழர் வாழ்விடையே
ஞானம் கல்வி செல்வமொடு
நன்றே யெய்தித் திகழ்கவென,
கானம் பாடிக் களிமகிழ்வால்
கைகோத் தாடி இன்னகையார்
தானம் பலவும் புரியவரும்
'தை'யின் முதல்நா ளாமின்று 116

செந்நெல் வாழை கரும்புதென்னை
செழித்த பழனம் அளித்தவளம்
பன்னற் கரிதாய்ப் பரந்தீண்டப்
பார்த்து மகிழ்ந்து பைங்கிளியார்
கன்னற் பாகும் கோற்றேனும்
கனியின் சாறும் கலந்தடிசில்
மின்னற் கொடியின் இடைதுவள
விருந்திற் களிக்க விழைந்தனராய் 117

பொன்னிற் பொலியும் புதுக்கலத்தில்
பொற்பார் ஆவின் பாலூற்றி
மின்னிற் பகட்டும் செந்நெல்லின்
மிளிரும் அரிசி தனைப்பெய்து

கன்னித் தமிழின் சுவைசேரக்
கனிவாய்ப் பொங்கும் 'பொங்கல்' அது
மன்னித் திகழ்க! தமிழ்நாட்டில்
மலர்க! விரைந்தெங் கேறத்துவமே! 118

தேர்தல் பிரச்சார ஆரம்பவிழாவைத் தொடர்ந்து தமிழகத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் சென்று தமிழர்களைத் தட்டி யெழுப்பி விறுகொள்ளச் செய்யும் பொறுப்பை எழிலரசும் இன்பவல்லியும் ஏற்றனர் அங்ஙனம் அவர்கள் செய்த தேர்தல் பிரச்சாரத்தின் சாரத்தைக் கவிதைவடிவில் காண்க:—

## எழிலரசின் கூற்று

நாட்டின் அவல நிலையைப் போக்க நாம் செய்த தொண்டு யாதென ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டுமெனல்:—

பட்டினியும் பசிப்பிணியும் பற்ற நொந்து
பதறுகின்றார் தொழிலாளர் வர்க்கம் இன்று
மட்டின்றி உழைத்துழைத்திங் குழவர் ஆனோர்
மண்ணோடு மண்ணாக மாள்கா நின்றார்
தெட்டிநின்று விலையுயர்த்தும் வணிகர் கூட்டம்
சீமான்கள் ஆய்வாழ்வில் செழியா நின்றார்
அட்டியின்றிக் காங்கிரசார் கொணர்ந்த இந்த
அவலநிலை அழிந்தொழிய என்செய் தோம்நாம்! 119

ஆட்சி மாறினலொழிய நாட்டின் அவலநிலை தவிராதெனல்:

காங்கிரசின் உடும்புப்பிடி கழலல் வேண்டின்
கனிவுமிகு தமிழரசி ஆள வேண்டின்
வீங்கியுயர் விலைவாசி தணிதல் வேண்டின்
வெதுப்புகின்ற இமையெலாம் மாய்தல் வேண்டின்
ஏங்குகின்ற ஏழைநிலை உயர வேண்டின்
எழிலாரும் பொதுவுடமை பூத்தல் வேண்டின்
தேங்குவளை விழிமானே! நன்மை செய்யும்
திறனுடையார்த் தேர்ந்தெடுத்தல் வேண்டும் வேண்டும்

### சனநாயகந்தழைக்க வேண்டுமெனில் சரியான தலைவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமெனல்

*புதுமையது வாழ்விலிலே பொலிய வேண்டின்,*
*பொல்லாங்கிங் கத்தனையும் பொசிதல் வேண்டின்*
*மதுரமிகு தமிழ்நாடு மலர்தல் வேண்டின்*
*மடமையொடு வறுமையது மாய்தல் வேண்டின்*
*கதிர்வரமுன் னிருளகன்று விலிதல் போலக்*
*கழகமெதிர் பகையழிந்து சிதறல் வேண்டின்*
*சதிர்பெறுநற் றமிழர்காள்! நீவிர் ஆய்ந்து*
*சரியான தலைவர்தமைத் தேர்தல் வேண்டும்* 121

நாம் திருந்தினுலொழிய, நலிவுதருங் காங்கிரசு ஆட்சி நம்மை விட்டகலா தெனல்:-

*காந்தியையும் நேருவையுங் காட்டிக் காட்டிக்*
*கயமையினை மறைத்திடுவார் புளித்த கள்ளை*
*மாந்திவந்து மேடையிலே ஏறி நின்று*
*மதுவிலக்கு வெற்றியினை எடுத்துச் சொல்வார்*
*சாந்துணையும் பதவியினை விடோம்காண் என்று*
*சதுராக அதற்கனைத்துஞ் செய்வார் இன்று*
*நாம் திருந்தி னுலொழியப் போக்கர் ஆட்சி*
*நமைவிடுத்திங் கொழியாது நலியுந் தானே!* 122

ஃ ஃ ஃ

காங்கிரசு சமதர்மம் பேசுவதெல்லாம் சந்தர்ப்பவாத மெனல்:-

*சமதர்மம் என்றெழுதி நக்கிப் பார்த்துச்*
*சாலவினி தென்றிட்ட கதையைப் போலச்*
*சமதர்மம் சமதர்மம் என்ப தெல்லாம்*
*சந்தர்ப்ப வாதமெனல் தெளிவ தாச்சு*
*சமதர்ம வாழ்வினுக்கும் இந்தப் பொல்லாச்*
*சழக்கருக்கும் எத்துணையோ தூரம் உண்டு*
*சமதர்மம் உண்மையிலே மலர வேண்டின்*
*சதிகாரர் விரித்தவலை கிழித்தல் வேண்டும்.* 123

செல்வம் சிலரிடைக் குவியவும் பலர் வறுமையில் வாடவும் காரணமான காங்கிரசார் சாதியின் பேரால் ஓட்டுப் பெற அறுபத்தேழில் குழைவார் எனல் :—

மாடியின்மேல் மாடியது மருவக் கண்டோம்
மங்குகின்ற குடிசையது மல்கக் கண்டோம்
கோடியின்மேல் கோடிசிலர் குவிக்கக் கண்டோம்
கும்பியுங்காய்ந் திங்குபலர் குமையக் கண்டோம்
சாடியினி வறுமையினை ஒழிப்போ மென்று
சமதர்மம் பேசிடுவோர் உயர்வுங் கண்டோம்
கூடியினி இவரறுபத் தேழில் வந்து
குலஞ்சொல்லி ஓட்டிற்காய்க் குழைதல் காண்போம்.

## உணவு விடுதிகளும் ஆட்சியாளரும்

சோற்றினிலே சுண்ணாம்பு கலந்து விற்பார்
தொகைவகையாய் மாடிபல எழுப்பக் கண்டோம்
காற்றினிலே இலம்பஞ் சென்ன ஏழை
கதிகலங்கி அணுஅணுவாய் மடியக் கண்டோம்
நாற்றமிகு ஊழல்புரி ஆட்சி யாளர்
நமைப்பார்த்துச் சோசலிசம் இதுதான் என்றங்
கேற்றமுறும் அவர்களிடம் எய்தி நண்பீர்!
எமதுகட்சிக் கொருநிதியம் ஈயென் பாரே! 125

## செல்வர் நிறைந்துள்ள காங்கிரசு கட்சி ஏழைகளுக்கு நன்மை செய்ய நினையாதெனல்

காருந்து மாடமுறை கனம்கள் ஆனோர்
கவினுந்து பெருவாழ்விற் கனியா நிற்பார்
பேருந்து முதலைகளாய்ப் பெருகி வாழ்வார்
பெரியமில்லுத் திமிங்கலமாய்ப் பிறங்கா நிற்பார்
தேருந்து வண்டிகளில் செருக்கிச் செல்வார்
தேர்ந்துவந்து காங்கிரசில் சேரா நின்றார்
வாருந்து முலையாயிவ் வண்ட ராலே
வளமுந்து வாழ்வேழைக் கெய்துங் கொல்லோ! 126

**நாட்டில் நன்மையோங்க நல்லவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும் எனல்:-**

*போங்காலம் உற்றிழிவு பொய்மை லஞ்சம்*
*புதைந்தொழிய வறுமையற, புன்மை மாய,*
*தேம்மொழி உண்மையறம் செழித்து வாழ,*
*திருக்குறள்தொல் காப்பியமும் சிலம்பும் வாழ*
*நாம்வாழ, தமிழ்வாழ கலைகள்வாழ,*
*நல்லுலகம் வாழஉயர் நன்மை வாழ*
*தேங்காமல் திரண்டெழுந்து கழகம் நண்ணி*
*திருவோங்க நல்லவரைத் தேர்வீர் இன்றே.* 127

**கல்லூரிகளிலும் பயிற்றுமொழி தமிழேயாம் வண்ணம் திட்டங்கள் பலதீட்டி நிறைவு செய்யக் கழகத்திற் சேருங்கள் எனல்:-**

*கல்லூரி தனிற்பயிற்று மொழிய தாகக்*
*கவின் தமிழைக் கண்டிடல்நம் கடமை யன்றோ*
*அல்லூரி இருண்டநெஞ்சர் வஞ்சத் தாலே*
*அரியதமிழ் இழிவின்னும் அடையா வண்ணம்*
*எல்லோரும் எல்லாமும் தமிழிற் கற்க*
*எழிற்றிட்டம் பலதீட்டி நிறைவு செய்ய*
*மல்லூரித் திரண்டபுயத் தம்பி மார்காள் !*
*மாட்சிமிகு கழகவொளி மருவு வீரே.* 128

இன்றுவரை செய்த தவறுகளுக்குக் கழுவாயாக இனியேனும் நல்லவர்களைத் தேர்ந்தெடுத்து நன்மைபெறு வோம் எனல் :—

*இறந்தபல காலமுற்ற துன்பம் தேய*
*எழின்மருவு வளம்பெருக இன்பம் மேவச்*
*சிறந்தபல தொழில்வளரச் சிறுமை நீங்கத்*
*திருவுற நற் கலைமலரத் தென்றமிழ் செழிக்கத்*
*திறந்தபெரு மனதுடனே நன்மை தீமை*
*தெரிந்துவினை யாற்றியுயர் தீரர் தம்மை*
*அறந்திகழும் அரியணையில் இருத்தி நல்ல*
*ஆட்சியது மாட்சிபெற அணிசெய் வோமே !* 129

**பதவியில் உள்ள காங்கிரசுகாரர்களுக்கு அரியதுணைவர்கள் இவரெனல்:-**

*குடிகாரன் கொலைகாரன் கொள்ளைக் காரன்*
*கோணலினுக் கடிகோலி குலவும் பொய்யன்*
*படியாத நிர்மூடன் பணத்தின் கோட்டை*
*பாட்டாளி தனைவதைக்கும் பாவ மூட்டை*
*முடியாத செயலில்லை பணத்தால் என்று*
*முன்வந்து முடிச்சவிழ்க்கும் முரடன்சேட்டை*
*அடியாட்கள் இவர்களன்றே ஆட்சியாளர்க்*
*கருந்துணைவர் பெருந்தலைவர் ஆனார் இன்றே.* 130

**காங்கிரசு ஆட்சியாளர் தந்த பரிசிவை எனல்:-**

*பொய்புழுகிவ் வாட்சியிலே பொருந்தக் கண்டோம்*
*பொல்லாங்கிங் கத்தனையும் பொலியக் கண்டோம்*
*மெய்வழுவி இருந்தவிடம் தெரியா தோடி*
*மெலிந்திடவும் ஒழிந்திடவும் கண்டோம் அந்தோ*
*எய்யெனநின் றேழையர்கள் ஏங்கக் கண்டோம்*
*எதிர்ந்துவரும் வறுமைவெய் நூறக் கண்டோம்*
*கைகண்ட பலனாக ஆட்சி யாளர்*
*கட்டிவிட்ட சமதர்மக் கதைகண் டோமே!* 131

**காங்கிரசு ஆட்சியில் அதிகார வர்க்கமும் அவர்தம் ஊழலும் ஒன்றையொன்று விஞ்சின வெனல்:-**

*அதிகார வர்க்கமது பெருகக் கண்டோம்*
*அவரூழல் பன்மடங்கிங் குயரக் கண்டோம்*
*முதிராத அறிவுடைய மூடர் எல்லாம்*
*முன்வந்து பெரும்பதவி பெறவுங் கண்டோம்*
*சதிராக அவர்தாமிவ் வாட்சி வாழச்*
*சரியான ஆலவட்டம் வீசக் கண்டோம்*
*எதிராத துன்பமெலாம் எய்தும் வண்ணம்*
*இவர்திட்டம் தீட்டிநமை யேய்த்தல் கண்டோம்.* 132

**கல்வித்துறையைத் தங்களின் ஒப்பற்ற விளம்பர சாதனமாகப் பயன்படுத்தும் காங்கிரசு ஆட்சியாளர் நடத்தும் பள்ளிச் சீரமைப்பின் சிறுமை இஃதெனல்.**

*கற்றாரும் அறிவிருந்தும் நலன்த ராத*
*காங்கிரசார் ஆட்சியினின் கயமை ஓர்ந்து*
*சுற்றிஊர் திரிகின்ற அலுவ லாளர்*
*சுரண்டுதற்கும் சுகம்பெறற்கும் வகுத்த வொன்றைச்*

சிற்றூரி லும்பள்ளிச்சீ ரமைப்ப தென்று
சிறந்தவொரு விளம்பரமாய்ச் செய்த தன்றிப்
பற்றூர அதிற்சிறந்த பரிசி தென்னப்
பாராள வந்திட்டார் பகர்வார் கொல்லோ! 133

மதிய உணவு வழங்குகின்றோம் என்று சொல்வதெல் லாம் வெறும் மாய்மாலம் எனல் :—

(வேறு)

மதியவுண வென் றுரைசெய் மாய்மாலம் மாய
மதியவுண வதைவிரும்பும் வறுமையது சாயப்
புதியவுணர் வதுமக்கள் உளந்தனிலே பாயப்
புன்மைதரும் இழிசெயல்கள் புகைந்தழிந்திங் கோய
நிதியமது சிலரிடையே குவியுநிலை நீங்க
நித்தியமாய் வளமையது நின்றுசெழித் தோங்க
நதியதனின் நீர்பாய்ந்து பயிர் தழைத்தல் போல
நறுந்தமிழின் எழுச்சியுற்று நலம்பெறுவோம் நாமே!

காங்கிரசார் உழவனுக்கு ஆசைவார்த்தை சொல்லி மோசம் செய்கின்றனர் எனல் :—

(வேறு)

உழவனுக்கே நிலமென்றார் எந்த ஏழை
உழவனுக்கு நிலஞ்சொந்தம் ஆன தோகாண்!
உழவனுக்கே கடனென்றால் ஊழல் ஆட்சி
உதிரிகள்போல் பாதியதில் உறிஞ்சா நிற்பார்
உழவனுக்காக் காங்கிரசிங் குழைக்கு தென்பார்
ஓட்டதனைப் பெற்றபின்னர் திரும்பிப் பாரார்
உழவனுக்கிங் குற்றதுணை வறுமை யொன்றே?
உலுக்குகின்ற பலவரியும் துணைய தாச்சே! 135

பணக்காரர்களுக்கே வரியென்று கூறுதல் பச்சைப் பொய், மறைமுகமாகவரியனைத்தும் ஏழைகள் தலையிலேயே சுமத்தப்படுகிறதெனல்,

வரிசெல்வ முள்ளவர்க்கே அன்றி ஏழை
வரிசெலுத்தல் எங்கனென உண்மை யொன்றும்
புரியார்போல் பெருந்தலைவர் புலம்பா நின்றார்
புன்மையினை எத்துணைநாள் மறைத்தல் கூடும்

வரிசெல்வர் வணிகர்முத லாளிக் கொள்ளால்
வரிசெலுத்த அவர்களென்ன மடைய ரோசொல்
வரியொன்றிற் கிரண்டுபங்கு விலையைக் கூட்டி
வாங்குகின்ற நமைவதைத்தல் உரையார் யாரே! 136

### எழிலரசின் கூற்று

புதிதாகக் கதரைப் போர்த்துத தேர்தலில் போட்டியிடும் காங்கிரஸார் இவர்களெனல் :—

வட்டிக்கு வட்டிதண்டும் வஞ்சர் கூட்டம்
வகையறிந்து பதுக்கிவிலை யுயர்த்தி நாளும்
தெட்டிநின்று பகற்கொள்ளை அடியா நின்ற
திறுமதிசேர் பெருவணிகர் சேர்ந்த கூட்டம்
அட்டியில்லாப் பெருந்திண் அதிபர் கூட்டம்
ஆலைமுத லாளிபலர் அணிசேர் கூட்டம்
பொட்டிமக்கள் இவர்களெல்லாம் கதரைப் போர்த்துப்
புகுந்திட்டார் நமையேய்க்கப் புகுந்திட்டாரே! 137

பணம்புரளப் பார்த்திட்ட நடிகர் கூட்டம்
பத்மஸ்ரீ பெறவிழையும் பதர்கள் கூட்டம்
குணஞ்சிறிது மில்லாத கோளர் கூட்டம்
குடிகெடுத்துப் பொருள்பறித்துக் குலவுங் கூட்டம்
கணஞ்சிறிதும் சிந்தைசெயாக் காட்டான் கூட்டம்
கவிதமிழின் சுவையறியாக் கயவர் கூட்டம்
வணர்ந்துசரி குழலாயிவ் வஞ்சர் எல்லாம்
வரிந்துகட்டிக் களங்காண வந்திட்டாரே! 138

தேர்தலில் காங்கிரசுக்குப்பக்கபலம் இவையெனல்:-

மடத்தினிலே உறைகின்ற மகான்கள் ஆசி
மாடியிலே குலாவுகின்ற செல்வர் ஆசி
படத்தினிலே நடித்துமிகப் பொருளைச் சேர்த்துப்
பழையநிலை மறந்தலையும் பதர்கள் ஆசி
நடக்கையிலே ஒழுக்கமிலாப் புல்லர் ஆசி
நவைமிகுந்த காங்கிரசின் நரிகள் தங்கள்
இடத்தினிலே இருக்குமதி கார ஆசி
இத்தனையுங் கொண்டுநமை எதிர்ப்பார் மின்னே. 139

**தேர்தலின் பொழுதுமக்களை ஏமாற்றக் காங்கிரசார் கையாளும் தந்திரங்கள் இவையெனல்:-**

*நீதியிலே உயர்காந்தி படத்தை மாட்டி*
*நிகரற்ற சமதர்மக் குறியைக் காட்டிச்*
*சாதியெனும் மந்திரக்கோல் தன்னை நீட்டித்*
*தணியாத இனவெறியைத் தட்டி மூட்டிக்*
*காதிநமை தோட்டத்தனைப் பெற்றுச் சென்று*
*கண்கலங்க விடுத்திட்ட கசடர் ஆனோர்*
*நாடியறக் கிடப்பேமுன் அறுபத் தேழில்*
*நரிகளெனப் பல்லிளித்து வருவார் காண்மின் !* 140

**நமது கழகத்தின் இலட்சியம் இவையெனல்:-**

*இல்லாமை இந்நாட்டில் இல்லை யாக*
*இரவுபகல் என்றுநிதங் குறைத்தல் வேண்டும்*
*கல்லாமை சிதைந்தொழியக் கயமை நீங்கக்*
*கலைஞானம் கொழித்திடநல் அறந்தான் வெல்லப்*
*பொல்லாமை அத்தனையும் பொசுங்கி மாளப்*
*பொதுவுடைமை பூத்திடவுள் எழுச்சி மேவ*
*எல்லாரும் நல்லவராய் இன்ப வாழ்வில்*
*ஏற்றமுறல் ஒன்றேநம் குறியாக் கொள்வோம்.* 141

**கழகத்தின் திட்டங்கள் இவையெனல்:-**

*சேலத்தின் இரும்பாலை செழிக்கக் காண்போம்*
*சிறந்தபல கனிவளங்கள் பெருகக் காண்போம்*
*ஆலையொடு பெருந்தும் அணிசேர் வங்கி*
*அரியபடக் காட்சிநிறு வனங்கள் எல்லாம்*
*ஏதும்வகை அரசினுக்கிங் குரிய தாக்கி*
*எழில்மருவ அனையனைத்தும் இயங்கும் வண்ணம் !*
*நிறையுயர் நல்லோர்க்குத் தலைமை நல்கித்*
*திறம்படநற் செயலாற்றிச் சிறக்கக் காண்போம்.* 142

**நல்லவர்கள் நாடாள நாம் வாக்கினை வழங்கவேண்டுமெனல்:-**

*எல்லோர்க்கும் இன்பமிகு வாழ்வு நல்கி*
*ஏற்றத்தாழ் வதற்கொரு எல்லை கட்டிப்*
*புல்லோர்கள் தாம்வளர்ந்து செழிக்கச் செய்யும்*
*புலைத்தொழில்கள் அத்தனையும் புழுங்கச் சாடும்*

நல்லோர்கள் அரும்பிலே வளர வேண்டின்
நயம்படவே கழகவழி நன்னெறி நின்று
வல்லோர்நாம் என்பதனை உறுதி யாக்கும்
வண்ணம்நம் வாக்கதனை வழங்குவோமே! 143

**கழகம் ஆட்சிக்குவரின் விளையும் நன்மைகள் இவையெனல்**

பசியின்றி அனைவருமே புசிக்கக் காண்போம்
பண்பாக எல்லோரும் வசிக்கக் காண்போம்
வசியொன்றி வளம்பலவும் சுரக்கக் காண்போம்
வண்டமிழிற் கலைகள்பல மலரக் காண்போம்
சகியவன்றன் மண்டலமும் சென்று வந்து
தமிழர்களின் தனிப்பெருமை நாட்டக் காண்போம்
கசிவந்த அமுதனைய இனிய சொல்லாய்!
கழகமதிங் காட்சியினைக் காணுங் காலே! 145

தமிழகத்தின் பெயரதுதான் மதராஸ் அன்று
தமிழகமே என்றுமுதல் சட்டம் செய்வோம்
தமிழகத்தில் ஆகாச வாணி பேசாள்
தகவான வானொலியே வழங்கா நிற்கும்
தமிழகத்தின் ஊர்ப்பெயர்கள் தெருவின் பேர்கள்
சரியான தண்டமிழில் தருவம் ஒன்றே!
தமிழகத்தின் பொற்காலம் இதுவே என்னத்
தமிழரிடை மறுமலர்ச்சி தனைக்காண் போமே! 146

## இன்பவல்லியின் கூற்று

இந்தியெதிர்ப்பின் இன்றியமையாமையை வலியுறுத்தல் :-

இந்தியதிங் காட்சிமொழி யாகும் என்னில்
எழிற்றமிழ்தான் சிறுமையுறும் என்று சொல்லி
முந்திநின்ற அறிஞரெலாம் முழங்கா நிற்க
முதுக்குறைவு சிறிதுமிலா மூடர் ஆனோர்
சந்திசிரிக் கின்றவகை பதவிப் பித்தம்
தலைக்கேற அம்மொழியச் சிந்தி யாது
மந்தியெனப் பிடித்தபிடி தளர்த லின்றி
மாண்புறுநற் றமிழழிக்க மதித்திட் டாரே! 147

இந்தி யெதிர்ப்புப் போரில் சிந்திய செந்நீர் வெற்றியை விளைக்குமெனல்:-

*இந்திப் பேய் பிடித்திடினே தமிழக் கன்னி*
*இரங்கிமிக நைவளென எண்ணி எண்ணி*
*முந்திப்போய்த் தீக்குளித்து நடுகல் நின்றார்*
*முனைந்துநின்று குண்டுபட்டுக் களத்தில் சாய்ந்தார்*
*கந்திப்போய் உடல்வருந்த அடிகள் பட்டார்*
*கடுஞ்சிறையில் வதங்கிநொந்தார் இவர்கடம்மை*
*வந்திப்போம் அவர்கள்புரி தியாகம் நம்மை*
*வழிநடத்த வெற்றிமுரசடிப்போம் நாமே!* 148

தமிழர் படை வெல்லுமெனல்:-

*முத்தான கதிர்முன்எதிர் நிற்க லாற்று*
*மூடுபனி யோடியொளி முறைமை போலக்*
*கொத்தான அழகிளமை எளிமை யேய்ந்து*
*கொழிதமிழ்முன் இந்தியெனும் கோணல் பேய்*
*தான்*
*எத்தாலும் எதிர்நிற்க ஆற்றுங் கொல்லோ!*
*இளந்தமிழர் படையெழுந்து தருக்கு மாயின்*
*செத்தாலும் பதவியினை விடாத புல்லர்*
*சிதறிடவும் காண்பதினித் திண்ணந் தானே!* 149

## எழிலரசியின் கூற்று

*தமிழின் மறுமலர்ச்சிக்குக் காரணமாயிருந்த தமிழ்ச் சான்றோர்களின் தொண்டினை நினைந்து எழுச்சி கொள் வோமெனல்:-*

### பேராசிரியர் சுந்தரம்பிள்ளை

*இறைவனையும் தமிழினையும் ஒன்றாய்க் கண்ட*
*எழிற்றமிழன் சுந்தரனார் ஏற்றம் வாழ்க!*
*பொறையுண்மை உறுதியறம் ஒழுக்கம் தூய்மை*
*பொதுளவரும் மறத்தமிழர்க் கிணையின் றென்றிங்*
*கறைதரும்நல் லுரைசிறக்க அன்ப தோங்க*
*அருந்தமிழர் படைகொண்மின்! ஆட்சி யென்னும்*
*மறைவினிலே ஒளிந்துவரும் பொல்லா இந்தி*
*மறிந்துவிழ எறிமின்! நும் மறந்தான் வெல்க!* 150

### சுப்பிரமணிய பாரதியார்

ஆங்கிலமோ கத்துழன்ற தமிழர்க் கன்றிங்
கடையுடனே தமிழ்ப்பெருமை எடுத்துச் சொன்ன
வீங்குபுகழ்ப் பாரதியின் நாமம் வாழ்க!
விரும்புமவன் கனவனைத்தும் நனவ தாக
ஓங்கியுயர் கலைபலவும் தமிழில் ஆக்கி
ஒண்டமிழில் இலாதனவொன் றில்லை யென்னும்
தேங்குமிசை சிறந்தோங்க உலகம் போற்றத்
தெருவெங்கும் தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்! 151

### மறைமலை அடிகளார்

தூய்யதமிழ் நடையதொன் றில்லை யென்று
துணிந்துசொன்ன மடமையது தூள்தூ ளாகச்
செய்யதமிழ் நடைவளர்ந்து செழிக்கச் செய்த
திறன்மிகுநன் மறைமலையின் சீர்தான் வாழ்க!
மையல்தரு மிந்தியிங்கு மருவு மாயின்
மாண்புறுநம் தமிழ்மொழியும் மறைவிர்! என்றன்று
ஐயமிலவன் உரைத்தமொழி அமுதாய் மாந்தி
அருந்தமிழ்காத் திடுமறிஞர் அணிதான் வெல்க! 152

### திரு. வி. க.

தொழிலாளர் வாழ்க அவர் துயரம் தீர்க
தூயதமிழ் வெல்கவெனத் துயர்க வென்ற
எழிலாரும் திரு. வி. க. ஏற்றம் வாழ்க!
இனிக்க அவர் தந்ததமிழ் என்றும் வாழ்க!
பொழிலாரும் தமிழகத்தின் பொற்பு வாழ்க!
பொதுமகளாய்ப் போந்துநின்ற இந்தி யென்னும்
பழிகாரி பிடியகன்று தமிழ்த்தாய் வாழ்க!
பண்பாடன் பைந்தமிழ்காக்கும் படைதான் வெல்க!

### பாரதிதாசன் அவர்கள்

புதுமையுற மடமையறப் புரட்சி யோங்கப்
புதுவைவரு கவிஞனது புகழ்தான் வாழ்க!
பொதுவுடைமை மலர்கவென அவன்றன் யாத்த
புரட்சிமிகு கவிதைகளின் பொற்பு வாழ்க!
கதுவிவருத் திடுமுயர்வுந் தாழ்வும் நல்ல
கடவுள்பொறுப் பென்றிடுமக் கயமை மாய
இதுதருணம் திரண்டெழுமின்! நுமது வாக்கை
எழின்மருவு கழ்கவணிக்கிட்டு வெல்மின்! 154

## இன்ப வல்லியின் கூற்று

தமிழ்ச்சான்றோரை மதியாத தமிழக அரசின் ஆணவப் போக்கினைக் கடிந்து கூறுதல்:-

*தமிழினிய இலக்குவனார் தனித்தொப் பில்லாத்*
*தமிழ்வளரப் பதவியிழந் தலைதல் கண்டோம்*
*தமிழுணர்ந்த மூதறிஞன் தேவ நேயன்*
*தனைப்புரப்பார் இன்றிமிகத் தவித்தல் கண்டோம்*
*தமிழ்எமது மூச்சென்னும் கி. ஆ. பெ. வி*
*தகவிழந்து சிறையினிடை வாடக் கண்டோம்*
*தமிழ்வழங்கும் பரப்பெல்லாம் தமிழர்க் காகத்*
*தனித்துழைத்த ம.பொ.சி தளர்வுங் கண்டோம்.* 155

### எழிலரசின் உரை

பழமையிற்பற்று நீங்கின் அன்றே வறுமை தவிருமென்றல்:-

(வேறு)

*வறுமையிற் பிறந்து வறுமையிற் றவழ்ந்து*
*வறுமையிற் றுவண்டு மடிவீர்காள்!*
*வறுமையிற் பிறந்து வறுமையிற் றவழ்ந்து*
*வறுமையிற் றுவண்ட வழியேதச்*
*சிறுமையிற் றவிர்ந்து பெருமையிற் பிறங்குந்*
*திருவுறச் சிறிது நினைவிரேல்*
*கறுமையிற் கொடிய பழமைமுற் றழியக்*
*கழகமுற் றினிதின் உயர்வீரே!* 156

### புதிய காங்கிரஸ்காரர்களின் சமதர்மப்பேச்சு

(வேறு)

*கைகட்டிக் கதர்கட்டிக் காமராசர்*
*கால்கட்டிக் காங்கிரசில் புகுந்து நின்று*
*பொய்கொட்டிப் புழுகட்டிப் பேசிப் பேசிப்*
*பொருள்தட்டி விலாப்புடைக்கும் புன்மையாளர்*
*மெய்யொட்டி வயிறொட்டிக் கன்னம் ஒட்டி*
*மெலிவொட்டி வாடுகின்ற நம்மைப் பார்த்துக்*
*கைகொட்டிச் சமதர்மம் கொணர்வோம் என்றோர்*
*கதைகட்டிச் சிரிப்பதைநீர் காண்மின்! காண்மின்!* 157

கழகம் ஆட்சிக்குவரின் விளையும் நன்மைகள் ;

*வறுமையெனும்பெரும் பிணிதான் மடியக்காண்போம்*
*வளமைமிகு நல்வாழ்வு மருவக் காண்போம்*
*சிறுமைதரும் அறியாமை சிதறக் காண்போம்*
*செந்தமிழில் நறுங்கலைகள் திகழக் காண்போம்*
*கறுமைதரும் புன்மையெலாம் அழியக் காண்போம்*
*கடமையுணர் கண்ணியர்கள் கவினக் காண்போம்*
*குறுமைநரிக் குணம்படைத்தார்குமையக் காண்போம்*
*கோலமிகு கழகமர சோச்சுங் காலே !* 158

அறிஞர் அண்ணு வாழ்க, அவர்தம் கட்சி வெல்க, எனல் :

*(வேறு)*

*தமிழ்வாழப் பலதடவை சிறைசென்ற சீயம்*
*தமிழரிடை மறுமலர்ச்சி தனைக்கண்ட செம்மல்*
*அமிழ்தினிய சொற்கொண்டல் அறிஞர் அண்ணு*
*வாழ்க !*
*அவன் தம்பி மார்களெலாம் அணிசெயவென் றிடுக !*
*தமிழ்வளரத் தமிழாட்சி தனையமைத்திங் கின்பத்*
*தமிழ்வளரப் பணிபுரிக சால்புறுக தமிழர்*
*உமிழிசையெண் டிசைபரவி ஒளிசெய்க ! உயர்க !*
*ஒள்ளியநம் கழகமர சுற்றிடுக விரைந்தே !* 159

ஆற்றல்சால் நம் பேராசிரியர் இலக்குவனார் அமைச்சராய் ஏற்றம்பெற் றிலங்குக எனல் :

*செந்தமிழ்த்தாய் வாழ்வுறவே வந்துதித்த திறலோன்*
*செறிவுறுசீர் அறிவுடையன் இலக்குவனும் விறலோன்*
*அந்தமிழ்க்காப் பதவியிழந் தருஞ்சிறைபுக்*
*குழன்றேன்*
*அருந்தமிழ்காத் திடும்படைக்கிங் கணிசெயுமோர்*
*தலைவன்*
*வந்திடுநம் கழகவரசு அதனிடைநல் அமைச்சாய்*
*வாழ்வுறுவன் தமிழன்னை வாழ்வுறுக ! என்றே*
*சந்தமிகு தமிழ்ப்பாடி ஆடிடுவோம் இன்றே*
*தமிழ்வளரப் புலவர்நிலை தகவுறுக ! நன்றே !* 160

அறுபத்தேழில் ஆளுங்கட்சி மண்ணைக் கவ்வுகிறது கழக உறுப்பினர் பெருமளவில் வெற்றி பெறுகின்றனர். வெற்றி விழாவில் தலைமைதாங்கிய இள்பவல்லியின் அன்பின் கனிவுரை :

உதயசூரியன் வானில் உதிக்கக் கண்டோம்
ஒண்மலர்கள் பூத்துமணம் வீசக் கண்டோம்
துதயநின்ற இருள் நீங்கி ஒழியக் கண்டோம்
துன்பலைத்தும் அதைத்தொடர்ந்தங் கோடக்
கண்டோம்
இதயமது களித்தின்பக் கடலின் மூழ்கி
இளந்தமிழர் துள்ளியெழுந் தார்ப்பக் கண்டோம்
இதையறிந்திவ் வுலகமெலாம் எழுச்சி கொள்ள
எந்தமிழர் ஏற்றமுறும் எழில்கண் டோமே! 11

**எழிலரசின் உரை :**

நம்தமிழ்வாழ, நாடுவாழ, உலகம் வாழ உழைப்போம் எனல் :

ஊரெங்கும் தமிழ்வளர உழைப்போம் இந்த
உலகெங்கும் தமிழிசை உலவச் செய்வோம்
பாரெங்கும் குறளறமே பரவும் வண்ணம்
பைந்தமிழில் கவிதைபல படைப்போம் தூய
நாரெங்கும் கமழ்ந்துலகில் நன்மை யோங்க
நறும்பணிகள் பலபுரிவோம் வறுமை தேய்ந்து
சீரெங்கும் சிறக்கவருட் டிறந்தான் வெல்ல,
செழுந்திருவுற் றெழுக்கநெறி திகழ்வோம் நாமே!

**கழகத் தலைவர் அறிஞர் அண்ணா தலைமையில் தமிழக அமைச்சரவை அமைகிறது. அன்று அண்ணன் அவர்கள் நாட்டு மக்களுக்கு விடுத்த நற்செய்தி:-**

எம்மரசி தமிழன்னை செங்கோல் கொள்ளும்
எழில்நன்னாள் இன்றுற்ற தெழுமின்! நீவீர்
நும்மில்லந் தொறும்விழவு சிறக்கக் கொண்மின்!
நுண்பொருட்டொல் காப்பியம்நற் குறளி னோடு
நம்தமிழின் அகம்புறமும் இளங்கோ செய்த
நறியதமிழ் முதல்நூல்கள் நன்கு வாழத்
தெங்கி றடுமா வாழைத்தோ ரணங்கள் நாட்டித்
தெருவெங்கும் தமிழ்க்கழகம் செழிக்கச் செய்வீர், 163

நல்லாட்சி கண்ட பேரறிஞர் அண்ணா அவர்களை அனைவரும் வாழ்த்துகின்றனர்:-

*அண்ணா, நின் செயல்திறங்கண் டவனி மாந்தர்*
*அறிஞருக்கும் அறிஞனிவன் என்று போற்ற,*
*நண்ணாரும் ஏத்தெடுப்ப, நன்மை ஓங்க*
*நல்லாட்சி தனைக்கண்டாய்! ஞாலம் உய்யப்*
*பண்ணாரும் தமிழர்களின் பாங்கு தன்னைப்*
*பாரறியச் செயவுதித்த பரிதி ஒப்பாய்,*
*கண்ணாக நின்றுதமிழ்த் தாயைக் காப்பாய்!*
*கனிவாக நின்நாண்மீன் களித்து வாழ்க!* 164

**இன்பவல்லியும் எழிலரசும் தம்தமிழ்ப் பணியைத் தொடர்ந்து நடத்துகின்றனர்.**

**வாழ்த்து**

(வேறு)

*சீரோங்க இன்பம் செறிந் தோங்கச் செந்தமிழ்த்தாய்*
*நாரோங்க அன்பு நலமோங்கப்—பேரோங்கும்*
***அண்ணாவின்** ஆட்சி அவனிக் கணிசெய்க!*
*கண்ணாக நின்று கனிந்து.* 165

*செந்தமிழின் உயர்வதுவே தமதுயர்வாக் கொண்டு*
*திகழ்இன்ப வல்லியுடன் எழிலரசும் அவர்தம்*
*அந்தமிழின் அமுதமொழி மழலையும்நல் அன்போ*
*டழகிளமை தூய்மைதிரு அணிசெயநன் குயர்க!*
*சொந்தமதாய்க் கடமையுங்கண் ணியங்கட்டுப் பாடும்*
*துலங்கிடவே எதையுந்தாங் கிதய உரன் எய்தி*
*நந்தமிழர் வாழ்வினிலே புதுமையொளி பெறுக!*
*நறுங்கலைகள் பலமலர்க! நன்மையெலாம் வளர்க!* 166

*காந்திதம் எளிய வாழ்வில்*
*காட்டிய நெறியில் நின்று*
*சாந்திபெற் றுலக முய்க!*
*தனிமகிழ் சிறக்க மேன்மை*
*எய்ந்துநம் நாடு முற்றும்*
*எழில்வளஞ் சுரக்க இன்மை*
*தேய்ந்திட உழைப்பு வெல்க!*
*தெருண்மிகுந் துயிர்கள் வாழ்க!* 167

**இன்பவல்லியின் எழிலோவியம் முற்றிற்று**

## வாழ்க தமிழ்!

